1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams: "CATHOLIC PRESS" JAFFNA.
Telephone: No. 100.

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

78-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1953-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 5-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 43-ம் இலக்கம்

### காலநிலை

இரண்டொரு தினங்களாகக் கடும் பனி பெய்கின்றது. மழைக்கோலம் இடையிடையே காணப்படுகின்றது. ஆங்காங்கு மும்முரமாகத் தலைகாட்டிய தடுமன், கண்ணோய் முதலியவை இன்னுமே அமர்ந்தபாடில்லை. சமீபத்தில் பெய்தமழையானது நெல், வள்ளிக் கிழங்கு, மாவள்ளி ஆதியவற்றிற்கு மிகவாய்ப்பானதென்று சொல்லப்படுகிறது.

### புதிய சிரேஷ்டர்

இலங்கையிலே அமலோற்பவ மரிய நாயகிசபைக்குருமாரின் சிரேஷ்டராய் இருந்துவந்தவரான அதிவண. எவ். எம். விசியன் சுவாமியவர்களிடமாகப் புதியசிரேஷ்டராய்க் கடந்த ஆறுவருடங்களாகக் கொழும்பு அதிமேற்றிராசன விக்கார்-ஜெனறலாய் இருந்துவந்த அதிவண. ஜி. போட்ரின் சுவாமியவர்கள் சபையின் அதிசிரேஷ்டரால் நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்றார். அவரிடமாகப் புதியவிக்கார் - ஜெனறலாக அதிவண. அலெக்சிஸ் செறு சுவாமியவர்கள் நியமனஞ் செய்யப்பட்டிருக்கின்றார்.

### ஆசிரியர்களின் ஞானஒடுக்கம்

யாழ்ப்பாண மேற்றிராசனத்தைச் சேர்ந்த மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆதியாம் பகுதிகளிலுள்ள கத்தோலிக்க தமிழ்ப்பாடசாலைகளிலே கடமையாற்றி வருகின்ற ஆசிரியர்களின் வருடாந்த ஞானவொடுக்கம் ஒன்று சென்ற 27-ந்திகதி செவ்வாய்க்கிழமை மருதமடுத்திருப்பதியில் ஆரம்பமாகி 31-ந்திகதியாகிய அடுத்த சனிக்கிழமை முடிவாயிற்று. இதிலே 100 ஆசிரியர்கள் வரையில் கலந்துகொண்டனர். தூத்துக்குடி மேற்றிராசனத்தைச்சேர்ந்த பேரான பிரசங்கியாரான வண. மரியஞானம் சுவாமியவர்கள் ஞானவொடுக்க போதகஞ்செய்தனர். நம் மேற்றிராணியாண்டவரும், விக்கார் ஜெனறல் சுவாமியவர்களும், யாழ்ப்பாண மேற்றிராசன கத்தோலிக்க பாடசாலைகளின் பிரதம முகாமைக்காரரான அதிவண. ரி. ஏ. ஜே. மதுரநாயகம் சுவாமியவர்களும் சமுகமளித்து ஞானவொடுக்கத்தை ஞானப் பரிமளம் கமழச்செய்தார்கள். கடைசித்தினமன்று மேற்றிராணியாண்டவர் திவ்வியபூசை நிறைவேற்றி அனைவருக்கும் உணர்ச்சிததும்பும் படியான நன்மதிகள்உரைத்துக் கத்தோலிக்க சேவையில் அவர்களை ஊக்கப்படுத்திவிடலாயினர். முந்திய ஞானவொடுக்கங்களைப்போல இதுவும் மிகஅருட்சிக்குரியதாய் இருந்தது.

### யுத்தஞாபகதினம்

1914-ம் ஆண்டுமுதல் 1918-ம் ஆண்டுவரையிலும், 1939-ம் ஆண்டு முதல் 1945-ம் ஆண்டு வரையிலும் நடைபெற்ற மகாயுத்தங்களின் ஞாபகார்த்ததினமாக இம்மாதம் 8-ந்திகதியாகிய வருகிற ஞாயிற்றுக்கிழமை இலங்கையிலும் கொண்டாடப்படவிருக்கிறது. இருமகாயுத்தங்களிலும் உயிர் துறந்தவர்களின் ஞாபகார்த்தமாக அன்றுபகல் 11மணிக்கு இரண்டு நிமிஷநேர மவுனம அனுட்டிக்கப்படும். அன்றுதினத்தை ஓர் யுத்த ஞாபகதினமாக அனுட்டிக்குமாறு பலசமயத்தவர்களையும் உள்நாட்டுமந்திரிசபைக் காரியாலய சுற்றறிக்கை ஒன்று கேட்டிருக்கின்றது.

## சுதேச வர்த்தமானம்

### மகாராணியாரின் விஜயம்

மாட்சிமைதங்கிய எலிசபேத் மகாராணியாரும், அவர்நாயகரான எடின்பேர்க்கின் டியூக்கோமகனும் அடுத்த வருடம் சித்திரைமாதம் 10-ந் திகதியன்று இலங்கைக்கு விஜயஞ்செய்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது சித்தஞ்செய்யப்பட்டுள்ள திட்டப்படி, அரசதம்பதிகள் சித்திரை 10-ந் திகதியன்றுகாலை கொழும்பு வந்துசேர்ந்ததும் துறைமுகத்திலே அவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்படும். பின்னர் அங்கிருந்து கொழும்பு நகரிலே ஒன்பதுமைல் தூரம் அவர்கள் இராசபவனிசென்று இராணி மாளிகையை அடைந்து அங்கே தங்குவார்கள். அவர்கள் இங்கே தங்கியிருக்கும்போது, இலங்கையின் புராதன சின்னங்களைப் பார்வையிடுமாறு அனுராசபுரத்துக்கும், பொலனறுவைக்குஞ்சென்று, பின்னர்நுவரெலிக்குப் போவார்கள். அதன்மேல் கண்டி நகருக்கு விஜயஞ்செய்துவிட்டுக் கொழும்புக்குத் திரும்புவார்கள். இப்போதைய திட்டப்படி, அவர்களுக்கு இராணிமாளிகையில் கவர்னர்-ஜெனறலும், "ரெம்பிள் றீஸ்" மனையில் பிரதமரும் இருவிருந்துபசாரணைகள் நடத்துவார்கள். மகாராணியாரின் விஜயத்தையிட்டு, கொழும்புக்குதிரைப் பந்தைய மைதானத்தில் நடைபெறவிருக்கும் குதிரைப்பந்தையத்தில் "மகாராணி கப்" என்ற கிண்ணப் பரிசிலை அவரே வழங்குவார்.

### புதிய நேர அட்டவணை

றெயின்களின் போக்குவரத்துப் புதிய நேரஅட்டவணை சென்ற 2-ந் திகதிமுதல் நடைமுறைக்கு வந்திருக்கிறது. அதன்படி, கொழும்பிலிருந்து காங்கேசன் துறைக்கு மாலை 8-05 மணிக்குப் புறப்பட்டுவந்த தபால் றெயின் இப்போது மாலை 7-15மணிக்குப் புறப்படுகின்றது. கொழும்பிலிருந்து தலைமன்னாருக்கு மாலை 7மணிக்குப் புறப்பட்டுவந்த தபால் றெயின் இப்போது மாலை 8 மணிக்குப் புறப்படுகின்றது. கொழும்பிலிருந்து மட்டக்களப்பு-திரிகோணமலைக்கு மாலை 8-25 மணிக்குப் புறப்பட்டுவந்த தபால் றெயின் இப்போது 8-45 மணிக்குப் புறப்படுகின்றது.

### புதிய செனற்றர்கள்

பாராளுமன்றப் பிரதிநிதிகள்சபையாலே தெரிவுசெய்யப் படவேண்டிய புதியசெனற்றர்கள் ஐவரும் சென்ற வெள்ளிக்கிழமைகாலை தெரியப்படலாயினர். அரசாங்ககட்சியினரால் திரு. ஜஸ்ரின் கொத்தலாவல, திரு. தோமஸ் அமரசூரிய, திரு. ஷம்ஸ் காசிம், திருமதி குளோடா ஜயசூரிய எனும் நால்வரும், எதிர்க்கட்சியினரால் திரு. எஸ். நடேசன் அவர்களும் தெரியப் பெற்றார்கள்.

### கவிதை அரங்கேற்றம்

இலங்கை வானொலி நிலையத்திலே இன்று கவிதை அரங்கத்தில் பிரிவு (அகப்பொருள்) என்னும் பொருள்பற்றிப் பேசுமாறு அழைக்கப்பெற்றிருக்கும் நால்வரில் ஒருவராய் ஊர்காவற்றுறைக் கத்தோலிக்க தமிழ்ப்பாடசாலைத் தலைமையாசிரியர் கே. ரி. ஞானப்பிரகாசம்அவர்களும் பேசவிருக்கிறாரென அறிகின்றோம்.

---

### சங். J. P. அலோஷியஸ் S. S. J. பிறதரின் தேகவியோகம்

இலங்கைச் சஞ்சூசைய‌ப்பர்சபைச் சந்நியாசர்களில் ஒருவரும், கல்விகேள்விகளில் சிறந்தவரும், கடந்த 44 வருடங்களாக அச்சபையில் ஓர் சந்நியாசராய் இருந்துவந்தவருமான சங். ஜே. பி. அலோஷியஸ் பிறதர் அவர்கள் சென்ற செவ்வாய்க்கிழமை காலஞ் சென்றாரெனும் துயரசெய்தியைத் தந்திவாயிலாகஅறிந்து பெரிதும் மனவருத்தமுற்றோம். மரிக்கும்போது இவருக்கு வயது 64. மறுமுறை இவரைப்பற்றி வரைய எண்ணுகின்றோம்.

R. I. P.

---

### வாழ்க்கைச் செலவு

இலங்கையிலே வாழ்க்கைச்செலவுப் புள்ளிகளின்தொகை சென்றஐப்பசியில் இருபுள்ளிகளால் குறைந்திருக்கிறது. அதுமுந்திபுரட்டாசியிலே 105·1ஆகவிருந்து சென்றஐப்பசியிலே 103 ஆக இறங்கியிருக்கிறது. அதனால்வாழ்க்கைப்படிச்செலவும் 101ரூபா 20சதத்திலிருந்து 98ரூபா90சதமாகக் குறைந்திருக்கிறது. அரிசி, மரக்கறி, மீன் ஆதியவற்றின் விலைகள்குறைந்தமையே இதற்குக்காரணமாகும். கூப்பன் அரிசியின்விலை ஐப்பசி 19-ந் திகதிமுதல் குறைக்கப்பட்டமையால் இதன் நயசுகம் இம்மாதத்திற்றான்தெரியும்.

### வத்திக்கான் தந்திச் சமாச்சாரம்

கருதினல்மார் திருச்சங்கதலைவரும், கீழைத்தேசசபைகளின் வத்திக்கான் திருச்சங்க காரியதரிசியுமான பிரான்சியகருதினல் ஈயூஜினி திசறான் ஆண்டவர் இம்மாதம்2-ந்தேதி திங்களன்று றோமாபுரியிலிருந்து ஆகாயவிமானத்திலே இந்தியாவுக்குப் பயணமாவாரெனச் சென்ற ஐப்பசி 31-ந் திகதி வத்திக்கானிலிருந்து தந்திச்சமாச்சாரம் எட்டலாயிற்று. அவர் இந்தியாவிலே கீழைத்தேச திருச்சடங்காசார கத்தோலிக்க சமூகங்களைத் தரிசிப்பார். திரும்பிச் செல்லும் வழியில் அவர் எகிப்துக்கும் விஜயஞ்செய்வாரென எதிர்பார்க்கப்படுகிறது.

### தகுதிப் பரீட்சை

நாளைநின்றுவரும் 7-ந்திகதி சனிக்கிழமை நடைபெறவிருக்கும் எட்டாம் வகுப்புத் தகுதிப்பரீட்சைக்கு இலங்கையின் சகலபாடசாலைகளிலுமிருந்து 48,000 மாணவர், மாணவிகள் சமுகமளிக்க விருக்கின்றார்கள். சென்ற வருடம் நடைபெற்ற இப்பரீட்சைக்கு 42,062 பேர் சமுகமளித்தார்கள். இவர்களில் 5,111பேர் தகுதியற்றவர்களெனக் கண்டறியப்பட்டார்கள். பாஷை, கணிதம், பொதுஅறிவுஎனும் மூன்றுபாடங்களிலும் பரீட்சை நடந்தேறும்.

### பிரதம நீதியரசர்

பிரதம நீதியரசரான சேர் அலன் றோஸ் அவர்கள் ஐந்துமாத லீவிலே இம்மாதம் 14-ந்திகதி பிரித்தானிய தேசம் செல்லவிருக்கின்றார். அடுத்த வருடம் சித்திரை மாதம் 6-ந்திகதியன்று மறுபடியும கொழும்புவந்து சேருவார். இவர் வருகிற வரையிலே பிரதம உபநீதியரசரான சங். நாகலிங்கம் நீதியரசர் பதில் பிரதமநீதியரசராகக் கடமையாற்றவிருக்கின்றார். சங். எச். ஏ. டி சில்வா நீதியரசரும் இளைப்பாறுதற்கு ஆயத்தமாய் இம்மாதம் 27-ந்திகதி லீவிலே செல்லுவார்.

### பனம்பொருள் விருத்தி

பனங்கழியிலிருந்து இனிப்புக்குழம்பு, சொக்கிளேற் முதலிய வகைகளை நவீன முறையில் தயாரிப்பதற்கான ஒழுங்குகளை நீர்வேலிச் சர்வோதய ஆச்சிரம அதிகாரிகள் செய்துவருகின்றார்கள். இம்முயற்சியை விருத்திசெய்வதற்கென்று பிரத்தியேகமாய் ஓர் தொழிற்சாலை அங்கு விரைவிலே அமைக்கப்படும்போல் இருக்கிறது. சென்றபங்குனி தொடக்கம் கருப்பநீரிலிருந்து பனங்கட்டிகாய்ச்சும்வேலை அங்கு நடைபெற்றுவரலாயிற்று. இங்குதப்பனங்கட்டிகள் அரசாங்ககுடிசைக்கைத்தொழிற்பகுதி உத்தியோகஸ்தர்களின் பாராட்டுதலைப் பெற்றுக்கொண்டதாகத் தெரியவருகிறது.

# அந்தோனி அனாதையா?

(சென்றவாரத் தொடர்ச்சி)

"அண்ணா, உங்களைப்போன்ற அன்புள்ளம் உடையவர்களுக்குச் சொல்லாமல் வேறுயாருக்குத்தான் சொல்வது? உள்ளதைஉள்ளபடியே உரைக்கிறேன்; கேளுங்கள், என் சோகக் கதையை" என்று பின்வருமாறு அப்பையன் கூறத்தொடங்கினான்.

"நான் ஓர்அனாதை. என்பெயர் அந்தோனி. இப்பொழுது எனக்கு வயசு பத்து. எங்கள் கிராமப்பாடசாலையில் ஐந்தாம் வகுப்புவரை படித்திருக்கிறேன். எனக்கு ஐந்துவயது நடக்கும்பொழுது எனது அருமைத்தாய் மறைந்தாள். என் அப்பாவுக்குப் போதியசொத்து இருந்தது. அவர் என்மேல் உயிர். என்னை அவர் பட்டணத்திற்கு அனுப்பிப் பெரியவனாக்க வேண்டுமென்று பெரிய ஆசைக்கோட்டைகளெல்லாம் நிறுவியிருந்தார்.

"என்னைப் பராமரித்து வளர்ப்பதற்கு ஒருவீட்டுக்காரி தேவைப்பட்டது. எனக்காகவே அவர் இரண்டாம்தாரம் மணம்செய்யவிரும்பினார். கடைசியாக ஒரு அம்மாளை மணஞ்செய்துகொண்டார். வந்தவள் என்னை வாஞ்சையோடு பார்த்தாள். வாரியணைத்து முத்தம்ஒன்று தந்தாள். என் உச்சி குளிர்ந்தது. பெற்றதாயைவிட இவள் நன்றாகஎன்னைச் சீராட்டிவளர்ப்பாள் என்றும், இவளை நான் சிற்றன்னையாகப்பெற்றது என்பாக்கியமேஎன்றும் கருதினேன்.

"சிற்றன்னைவந்த அடுத்தவருஷம் என் தந்தையும் காலமானார். அவரது மரணப்படுக்கையில்வைத்தே தன்பெயருக்கு என் அப்பாவின் சொத்துக்களை —அதுவும்விசேஷமாய் என்பெயரைச் சொல்லி — என்னைக் கண்கலங்கவைக்காது கண்காணிப்பதாய்ப் பொய்வாக்குச்சொல்லி—தன்பெயருக்கு எல்லாவற்றையும் எழுதுவித்துக்கொண்டாள். அப்பா மரணமடைந்தபின் ஆறுமாதமாக என்னை அன்பாகப் பார்த்துவந்தாள்அவள். அப்புறம் கையைவிரித்துவிட்டாள். என்னை அந்தஊரில்தானும் அடிவைக்கப்படாதென்று — வைத்தால் கட்டாயம்சாவாயென்று அச்சுறுத்தி அடித்துத் துரத்திவிட்டாள். நான் சிறுவன். சிறு செடி. இத்தகையபுயல் என்மீது வீசுமென்று எதிர்பார்த்தேனா?

"என் அருமைத்தாயாரை நினைத்தேன். கண்ணீர்விட்டேன். என் ஆசைஅப்பாவை நினைத்தேன். பெருமூச்சுவிட்டுப் பொருமினேன். விம்மி விம்மி அழுதேன். என்தலை சுழன்றது. என்னைச்சுற்றி என்னநடக்கிறதுஎன்று தெரியவில்லை. துக்கசாகரத்தில் மூழ்கியவனாய் அந்தநிமிஷமே அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டேன். எங்கேபோவது? என்னசெய்வது? இந்தவஞ்சக உலகில்என்று ஒன்றும் புரியவில்லை. கால்போனதிக்கில் நடந்தேன். நடந்துகொண்டே இருந்தேன். அப்படிநடந்தது அதுதான் என்வாழ்க்கையில் முதல்அனுபவம்.

"அன்று புறப்பட்டநான் — இன்றோடு பத்துநாட்களாய்ப் போதியஅன்னமோ ஆகாரமோ இல்லாது அல்லற்பட்டு, வெயிலிலும் மழையிலும் அடிபட்டு நேற்றுமாலைதான் இப்பட்டினம் வந்துசேர்ந்தேன். அந்தநெடுவழியே தன்னந்தனியே வந்தேன், இந்தச் சிறு செபமாலையின் துணையைக்கொண்டு. இது என்அன்னை எனக்கு அளித்த ஞாபகசின்னம்" என்றுகூறி ஒருசிறு வெள்ளிச்செபமாலையை எடுத்துக்காட்டினான் அந்தோனி.

இவ்வளவு நேரமும் அந்தோனி சொல்லிய சோகக்கதையை உணர்ச்சி ததும்பக் கேட்டஜெயநாதன் தன்னை அறியாமலே அழுதுவிட்டான். "ஆம், இவ்வுலகில் பணஆசையால் எத்தனை கொடூரங்கள் நிகழ்கின்றன! எத்தனை அக்கிரமங்கள் நடந்தேறுகின்றன!" என்று ஜெயநாதனின்நெஞ்சம்கோபத்தால் கடலலைபோலப் பொங்கியது. ஆனால், அந்தோனியின் பூப்போன்ற குழந்தையுள்ளத்தை எண்ணியதும் சிறிதுசாந்திபெற்றது "செல்வத்தில் வாழ்ந்த சிறுவன் இப்பொழுது சீரழிந்துநிற்கிறான். அவன்வாழ்வு வறண்டு கிடக்கிறது. அது எப்படியாவது வளம்பெற வழிசெய்யவேண்டும். இல்லையேல் நீ பிறந்ததின்பயன் தான் என்ன?" என்று அவனது அன்புஉள்ளம் அவனைக்கேட்டது.

ஜெயநாதனை அறியாதகுருமார் அப்பகுதியில் கிடையாது. எல்லோரிடமும் அவனுக்கு மதிப்புஉண்டு. செல்வாக்குண்டு. அவர்களிலும் அவனுக்கு நன்கு பழக்கமான—மிகமிகவேண்டிய ஒருவர்அங்கேஇருந்தார். அவருடைய ஞாபகம்வந்ததும் அவனுக்கு ஒருநம்பிக்கை பிறந்தது. "எப்படியாவது அவரிடம்சொல்லி அந்தோனியை ஒரு அனாதைகள் மடத்தில் சேர்த்துவிடவேண்டும்" என்று தனக்குள் திடசங்கல்பம்கொண்டான். பிறகு அந்தோனியைப்பார்த்து: "உனக்கு அனாதைகள் மடத்தில் சேர்ந்துபடிக்க ஆசையா? அப்படிச் சேர்ந்துபடிக்க உனக்கு விருப்பமா? சொல்; அதற்குவேண்டிய ஏற்பாடுகளை நான் செய்கிறேன்" என்றான். சிறுவனும் சம்மதித்தான்.

அடுத்தநாள் ஜெயநாதன் அந்தோனிக்கு நல்லஆடைவாங்கி அணிவித்து, தனக்குப் பழக்கமான அந்தக்குருவானவரிடம் அழைத்துச்சென்று, எல்லாவற்றையும் அவருக்குஎடுத்துக்கூறி: "ஏதோ, நீங்கள்தான் இவனைக் காப்பாற்றவேண்டும்; உங்கள்கையில்தான் இவனதுபிற்காலம் தங்கியிருக்கிறது; இவனை உங்கள் மடத்தில்சேர்த்து உதவிசெய்ய வேண்டும்" என்று அழாக்குறையாக அன்பாகக்கூறினான்.

அந்தோனியைநன்றாக ஒருதடவை உற்றுப்பார்த்தார் சுவாமியார். "சரி! நாளைக்கு வாருங்கள்," என்று அன்புவிடைபகர்ந்து அவர்களை அனுப்பி வைத்தார். மறுநாள் அந்தோனி மடத்தில் சேர்க்கப்பட்டான். ஜெயநாதன் தன்னாலான உதவிகளெல்லாம் அவனுக்குச் செய்துவந்தான் ஓர் அன்பான தந்தையைப்போல.

அந்தோனி ஆறும்வகுப்பில் படிக்கவிடப்பட்டான். அவன் ஓர்நல்லஇடத்துப் பிள்ளைஎன்பதை அவனதுநடை எடுத்துக் காட்டியது. அவனுடைய புத்திக்கூர்மையையும், புனிதநடத்தையையும், வித்தியாதிறமையையும்பற்றிப் புகழ்ந்துபேசாத ஆசிரியர்கள் அந்தக் கலாசாலையில் எவருமே இல்லை எனலாம். வகுப்பிலே எந்தத் தவணைப் பரீட்சையிலும் முதலிடம்வகிப்பவன் அவன்தான். அதையிட்டு எல்லோருமே அவனைப்பாராட்டுவர். ஆனால், பாவம், அவன் ஓர்அனாதையாய் இருப்பதையிட்டுப் பரிதாபப்படுவர். அவனும் வருடம்ஒருவகுப்பாய் ஏறியேறிச்சென்று அக்கலாசாலைப் படிப்பையெல்லாம் முடித்துவிட்டான். அதன்மேல் அந்தோனியைப்பற்றிய பேச்சே அங்கில்லை. ஆமாம், அவன் அங்கு இருந்தால்தானே.

நாட்கள், வாரங்கள், மாதங்களாய்ப் பலவருடங்கள் உருண்டோடின. அவன் அனாதைமடத்திற்சேர்ந்து இன்றுடன் பதினைந்துஆண்டுகள் பஞ்சாய்ப் பறந்தன. ஆனால், அந்தோனி இப்பொழுது வெறும்அந்தோனிஅல்ல. வண. அந்தோனி சுவாமியார். ஞானத்தந்தை. யேசுவின் பிரதிநிதி.

அன்று அவர்நிறைவேற்றிய பலிபூசையில் ஜெயநாதனுக்காக வேண்டிக்கொள்ள மறக்கவில்லை. ஆனால், ஜெயநாதனுக்கோ அவரது முதற்பூசையைக் காணும்பாக்கியம் கிடைக்கவில்லை. ஆம், அவர் அதற்குமுன்னரே பரகதிசென்றுவிட்டார்.

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

## தேம்பாவணியும் செபமாலையும்

### களிகூர்ந்தகாரணிக்கம்

### 2-ம் காரணிக்கம் — 3-ம் பிரியதத்தம்

### 13. பிரயாணம்

கோழிகள் கூவுகின்றன. புட்கள் சிலம்புகின்றன. வானத்து விண்மீன்கள் மறைகின்றன. உதயமால்வரை சிவக்கின்றது. சூரியன் தனதுகிரணங்களை விரித்துக்கொண்டு கீழ்க்கடலில் உதிக்கவிரைந்துகொண்டிருக்கின்றான். அப்பொழுது நசரேத்தூரின் வீதியூடே சூசையப்பரும், மரியாளும் தீவிரமாக நடந்துகொண்டிருக்கின்றனர். இருவர்க்கும் மெய்காப்பாளர் போல் ஓர்கூட்டம் வானவரும் அந்தரத்தேசென்றுகொண்டிருக்கின்றனர். பாவையரிற்சிறந்த பாக்கியவதியாகிய மரியாள் இருளுக்குப்பகையான சூரியனின் கதிரைத் தாமரை உண்டது போலப் பாவத்தின் பகையாகிய தேவசூலைத் தன்திருவயிற்றில் அடக்கியவளாய் ஞானவொளி வீசிச் செல்கின்றாள். சூசையப்பரோ தேவசூற்செய்தியை அறியாராயினும் தமது கருத்திலடைந்த பூரணஅருளினால் உள்ளம்பூரித்து இன்பக்கடலில் மூழ்கியவராய் நடக்கின்றார்.

இவ்வாறு அவர்கள், சோடுசோடாகக் குயில்கள் கூவுகின்ற இசைக்கேற்பச் சோடுசோடாக மயில்கள் ஆடாநிற்கும் பூஞ்சோலைகளைக் கடந்து, வளைந்து நீண்ட பெரியமதிளால் உயர்ந்த நசரேத்தின் கோட்டையையும் கடந்து யூதாபுரிசெல்லும் மார்க்கமாகத் திரும்புகிறார்கள். அதாவது:

"குயிற்றுணை குயிலுமின் இசையிற் கூத்தெழ
மயிற்றுணை ஆடிய பொழில் வளைத்தநீள்
எயிற்றுணை உயர்நகர் அகலஏகினார்."

அப்பொழுது வசந்தகாலத்தின் ஆரம்ப பருவமாதலால் எங்குமே கண்ணுக்கினிய தோற்றமளிக்கின்றது. நிலமெல்லாம் படர்ந்து அடர்ந்த பசும்புல்லானது கம்பளம் விரித்தாற்போல் இருக்கின்றது. ஆறுகள் கலக்கமின்றித் தெள்ளியநீரைக்கொண்டு ஓடுகின்றன. அகன்றவானம் நீலக்கடல்போல நிர்மலமாக ஒளிர்ந்துகொண்டிருக்கின்றது. அங்கொன்றும் இங்கொன்றுமாக விரைந்தோடிக் கொண்டிருந்த வெள்ளியமேகங்கள் குடைபோல் வெய்யிலை அவர்களுக்கு மறைத்துநின்றன. அன்னங்களின் இன்னொலியும், ஆறுபாயும் ஓசையும், உழவரின் ஆரவாரமும், மருதநிலத்தின் வளத்தினை விளக்கிநின்றன. சண்பகச்சோலைகளில் மலர்கள்பூத்துச் சொரிகின்றன. பொய்கைகளிலே தாமரைஅலர்ந்து அழகுறவிளங்குகின்றது. வலியகடாக்களால் உழப்பட்ட வயல்களிலே பயிர்கள்முற்றிக் கதிர்களைநீட்டித் தலைசாய்த்து நிற்கின்றன.

"செண்பக மலர்ந்தகாத் திரளும் பொய்கையும்
வண்பக(டு) உழைத்தபூம் வயலு(ம்) நாடும்தம்
பண்பக விசையொடப் படிகடந்து போய்......"

அவர்களின்விரைவுக்கு வாயுவேகம் முதலாய் ஈடாகவில்லை. அவ்வளவு வேகமானநடை. மனோவேகமே அதற்குஉப்பாகிறது. அதனை அகவிசை (மனத்தின்விசை) என்கிறார் புலவர். அன்பையே தமதுபண்பாகக் கொண்ட அவர்களின்கால்கள் அவர்களையறியாமல் அடியெடுத்துவைக்கின்றன. இவ்வாறுகநடந்து தமது அழகியநாடாகிய கலிலேயாவைக்கடந்துவிடுகின்றனர். இதுவரை ஒழுங்கான பாதையூடே அதிகசிரமமின்றி வழிநடந்தவர்கள் அப்பொழுது ஒருமலைப்பாதையைக் கடக்கவேண்டியிருக்கின்றது. கஷ்டத்தைப்பாராமல் அதன்மேல்ஏற முயற்சிக்கின்றார்கள்.

"விண்பகலவனென வெற்பினேறினார்"

சூரியன் உதயகிரிமேல் எழுந்தாற்போல அவர்களும் அம்மலைமீது ஏறுகின்றனர். அம்மலை அளக்கமுடியாத அளவுகொண்டு விளங்குகின்றது. அதன் தாழ்வரைகளில் முகில்கள் தவழுகின்றன. அருவிகள் சலசல சத்தத்துடன் ஓடுகின்றன. வானுறவோங்கி வளர்ந்தவிருட்சங்கள் ஒன்றோடொன்றுபின்னிப் பிணைந்திருக்கின்றன. கடைசியாக அம்மலையின்சிகரத்தைச் சூசையப்பரும் மரியாளும் சென்றடைந்து விடுகின்றனர். அவர்கள் அக்குன்றின்மேல் ஏறியவகையையும் முனிவர்விளக்குகிறார்:

"..........................குன்றுச்சிமேல்
நண்புதைத் தனநசைச் சிறை நலங்கொடு
விண்புதைத் தனமினின் விரைவுற் றேறினார்"

அன்பினாற்தூண்டப்பட்ட (நைத்தன) அவர்களுடைய ஆசையை (நசை) இறகாகக்கொண்டு (சிறை) மேகத்தில் தோன்றிமறையும் மின்னலைப்போல விரைவாகச்செல்கின்றனர். கறடும் குன்றும் கானும் வண்சாரலும்கடந்து முன்னேறுகின்றனர். உறவினரில்கொண்ட உருக்கமான அன்பால் உற்றதடைகளை அவர்கள்

**பண்டிதர், C. செல்வரத்தினம்**

பொருட்படுத்தவில்லை. அன்புஎன்னும் அளப்பரிய சக்திக்குமுன் எதிர்நிற்க வல்லதுயாது? தீயின்முன்னே வேகாத பொருள் இல்லை. சூரியன்முன்னே அகலாத இருளில்லை. நிறைந்த வெள்ளத்தின்முன்னே அதனைத் தடுத்துநிறுத்த அணையில்லை. அதுபோல உள்ளத்திலே அன்புபற்றிய விடத்து அரியவருத்தமும் இல்லை அல்லவா!

"தீய்முகத்(து) இணங்கிலா(து) இல்லைச் செஞ்சுடர்
காய்முகத்(து) இருளிலை கழுமு நீத்தமே
பாய்முகத்(து) அணையில் அன்பு பற்றிய
வாய்முகத்(து) அரியதோர் வருத்த மில்லையால்"

என்று புலவர்கூறுவதுபோல் அவர்களும் அன்பின்மிகுதியாலே தன் தாயின் கருவிலிருக்கும் சிசுவாகிய அருளப்பனுக்குப் பாவத்தால் வருந்துயரைப் போக்கவேண்டும் என்ற கருத்தோடு, வழிப்பிரயாணத்தால் ஏற்பட்ட சிரமங்களைப்பற்றிச் சிறிதும்சிந்தியாது வழிநடக்கின்றனர்.

அங்ஙனமாக நீண்டவழிதூரம் நடந்து, யோசேப்பைப்புதைத்த கல்லறையைச்சேர்ந்து, அங்கேசிறிது நேரம் தியானஞ் செய்கின்றனர். பின்னர் தெருஓரத்தில் காணப்பட்ட யாக்கோபின் கிணற்றண்டை சிறிது நேரம்தங்கியிருந்து சிரமபரிகாரம்செய்கின்றனர். அதன்மேல் மீண்டும் பிரயாணத்தைத்தொடர்ந்து யூதேயாநாட்டை அடைந்து எருசலேமிலுள்ள தேவாலயத்தைக் கிட்டிச் சேருகின்றார்கள். அங்கு வேண்டுதல்செய்து முடித்தபின் அவ்வாலயத்திற் பலிசெலுத்தும் இருபத்துநாலுகுருமாரும் வாழ்ந்துவரும் இடமாகிய எலிசபெத்அம்மாள்வதியும் எப்ரோனை அடைகிறார்கள்.

# சிறையிருக்கும் கருதினால்மார்

வார்சோநகர் அதிமேற்றிராணியாரும், போலாந்தின் திருச்சபை அதிபருமான கருதினால் ஸ்ரீபன் விசின்ஸ்கி ஆண்டவரை அதிகாரபதவியிலிருந்து அகற்றிச் சிறைவைத்திருப்பதோடு கிழக்குஐரோப்பாவிலே கம்யூனிஸ்த ஆட்சிகளின்கீழ் திருச்சபைக் கருதினால்மார்மூவர் தற்போது கைதிகளாயிருந்து வருகின்றனர். போலிஷ் கருதினால் ஆண்டவரைச் சந்நியாச ஆச்சிரமம் ஒன்றில்தானே கொண்டுபோய் அடைத்துவைத்திருக்கின்றனர்; அதுவும் சிறைவைத்ததாகுமா? என்று சிலர் சொல்லலாம். ஆனால், கம்யூனிஸ்தர் கொண்டுபோய் அடைத்துவைப்பதென்றால் அதன் கருத்துவேறாகும். ஆனால், இந்தப் போலிஷ்கருதினால் எங்கே இருக்கிறாரென்பது இன்னுமே எவரும் அறிந்தபாடில்லை. கம்யூனிஸ்தரின் “கண்காணிப்புச் சுதந்திர” நிலைமையில் வாழ்ந்துவருகின்ற மற்றோர்திருச்சபை இளவரசர், சாகிறெப்நகரின் அதிமேற்றிராணியாரான கருதினால் ஸ்ரிபினக்ஆண்டவரே. இவர் யூகோசிலேவிய நீதிஸ்தலம்ஒன்றால் 1946-ம் ஆண்டு பன்னிருவருடச் சிறைத்தண்டனை விதிக்கப்பெற்றார். ஆனால், பிந்த 1950-ம் ஆண்டு சிறைச்சாலையிலிருந்து கிறாசிக்எனும் கிராமத்தில் கொண்டுபோய் வைக்கப்பட்டார். ஹங்கேரிய திருச்சபைஅதிபரான கருதினால் மின்ட்சென்ரிஆண்டவர் அந்நாட்டுக் கம்யூனிஸ்த நீதிஸ்தலம் ஒன்றால் 1949-ம் ஆண்டு சீவபரியந்த சிறைத்தண்டனை விதிக்கப்பெற்றார். ஆனால், இன்று அவர்இருந்துவரும் சரியான இடம் எவருக்குமே தெரியவராது. இவர்களைத்தவிரத் தங்கள்அதிகார பதவிகளிலிருந்து விலக்கப்பட்டவர்களும், நாடுகடத்தப் பட்டவர்களும், கொலைசெய்யப் பட்டவர்களும், கம்யூனிஸ்த சிறைச்சாலைகளில் உயிர்துறந்தவர்களுமாய் இன்னும்அநேக மேற்றிராணிமார் இருக்கின்றார்கள்.

0 0 0

## இந்தியாவரும் கருதினால்

கீழைத்தேச சபைகளின் திருச்சங்க காரியதரிசியான கருதினால் திசறான் ஆண்டவர் அர்ச். தோமையாரின் நூற்றாண்டுவிழாக் கொண்டாட்டங்களுக்குச் சமுகமளிக்குமாறு இந்தியாவுக்கு வருவாரென அப்போதுபலரும் காத்திருந்தார்கள். அதற்குப்பதில் அவர் இம்மாதம் 7-ந் திகதி சனிக்கிழமை ஆகாயவிமானத்திலே டில்லிநகர் வந்துசேர்ந்து அடுத்த 10-ந் திகதியன்று ஏர்ணாக்குளத்துக்கு விஜயஞ்செய்வாரென அதிகாரபூர்வமான செய்திகிடைத்திருக்கிறது. அர்ச். தோமையாரின் அபூர்வமான புனிததிருப்பண்டங்களை அவர்தம்முடனே கொண்டுவருவதையிட்டு ஏர்ணாக்குளத்திலே அவருக்குப் பெரிதும்ஆடம்பரமான வரவேற்பு நடைபெறவிருக்கிறது. அங்கு மூன்று தினங்கள் தங்கியபின் அவர் மலையாளத்திலுள்ள ஏனையமேற்றிராசனங்களைத் தரிசித்து, மார்கழி 8-ந் திகதியன்று அல்வாய்க்குருமடத்திலே குருப்பட்டங்கள்அருளியபின் கள்ளிக்கோட்டைக்கு விஜயஞ்செய்வார். பின்னர் மார்கழி 12-ந் திகதி சென்னைக்குப் பிரயாணமாவார்.

0 0 0

## கருதினாலைக்கைதுசெய்தபின்

போலாந்தின் திருச்சபைஅதிபரான கருதினால விசின்ஸ்கி ஆண்டவரைக் கைதுசெய்து, தமதுகடமைகளை அவர் நிறைவேற்றாது தடுத்துவிட்டதைத் தொடர்ந்து போலிஷ்கம்யூனிஸ்தர்கள் குருமாரும், கத்தோலிக்க பிரமுகர்களுமாகச் சுமார் 2,500 பேரைச் சிறைபிடித்துக் கூட்டுக்காவல்முகாங்களிலும், அவசரகால சிறைச்சாலைகளிலும் அடைத்துவிட்டிருக்கின்றார்கள். ஜின்யெஸ்னோநகரிலே துணைமேற்றிராணியாராய் இருந்துவந்த பறானியாக்ஆண்டவரைக் கம்யூனிஸ்த பொலிஸ் ஏசன்றுகள் பலவந்தமாய்ச் சிறைபிடித்தபோதே இவர்களில்அதிகமானோர் கைதுசெய்யப் பெற்றார்கள். இவர்களை அடைத்துவைக்கவென்று இருவிசேஷ கூட்டுக்காவல்முகாங்கள் அமைக்கப்பட்டிருப்பதாய்க் கே. என். ஏ. என்ற ஜேர்மன் கத்தோலிக்க செய்திஸ்தாபனம் அறிவிக்கின்றது. லுபிளின் நகரிலுள்ள முகாம்ஒன்றிலே 50 குருமார்வரையில் சிறைவைக்கப்பட்டிருக்கின்றனர். குருமாருடன் 2,000 கத்தோலிக்கரும், சுமார் 400மாணவர்களும் கைதுசெய்யப் பட்டிருக்கிறார்கள்.

0 0 0

## பிரதிநிதிகளின் ஆட்சேபனை

மந்திரிமாரும், முன்னாள் மந்திரிமாரும்உட்படப் பிரான்சிய பாராளுமன்ற அங்கத்தவர்கள் இருநூறுபேர் ஒன்றுசேர்ந்து, போலாந்தின் திருச்சபைஅதிபரான கருதினால் விசின்ஸ்கி ஆண்டவர் தமதுபதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றாது தடுத்து விட்டிருப்பதையிட்டு ஆட்சேபித்தும், எதிர்பேசியும் பரீஸ்நகரில் இருந்துவருகின்ற போலிஷ்ஸ்தானிகருக்கு ஓர்கடிதம் அனுப்பிவைத்திருக்கிறார்கள். “நாகரீகமுடையஒருநாடு தகாதவழிமுறைகளைக் கையாளுவதையிட்டு நாம்பலமாக எதிர்பேசுகிறோம்; ஜனநாயக நாடுகளெல்லாம் உத்தரவாதமளிக்க ஆர்வத்துடன் விரும்புகின்ற கருத்துச் சுதந்திரத்திற்குப் பெருந்தீமைவிளைக்கின்ற இந்தச்சிறைவாசத்தை ஒழித்துவிடவேண்டுமெனப் போலிஷ் அரசாங்கத்தை நாம் கேட்டுக்கொள்ளுகிறோம்; கருதினால் ஆண்டவர் போலாந்திலே நியாயஎல்லைக்குட்பட்ட எந்தக் கருமத்துக்கும் சாதகமாகவே எப்போதும் நடந்துவந்தார்’ என அக்கடிதத்திலே எடுத்துக் காட்டப் பட்டிருக்கிறது.

## கன்னியாஸ்திரீயின் ஆராய்ச்சி

மரியாயின் சபையைச்சேர்ந்த ஓர்மிஷனரிய கன்னியாஸ்திரியான சிஸ்றர்மரியே சூசன்னா அவர்கள் முப்பதுவருடஆராய்ச்சியின் விளைவாய்க் கண்டுபிடித்துள்ள மருந்தானது குஷ்டரோகம்பரவுதலை விரைவிலே தடுக்கக் கூடியதாகும்போல் இருக்கிறது. அம்மைக்குப் போன்று குற்றிக்கொள்ளும் இதனைப் பரிசோதனைசெய்ததில் சிறந்தஅனுகூலம் ஏற்பட்டிருக்கிறது. இந்தக்கன்னியாஸ்திரி பீஜிதீவுகளின் குஷ்டரோகர் குடியேற்றதலமாகிய மகோக்காயிலே ரசாயனசாலைஒன்றில் சிலவஸ்துகள்கொண்டு 25 வருடம் ஆராய்ச்சிநடத்தியபின்னர் பரீஸ்நகரிலுள்ள சென் லூயிஸ் ஆஸ்பத்திரியிலும், பிந்தப் பாஸ்தோ ஸ்தாபனத்திலும் அதனைத்தொடர்ந்து நடத்தலாயினர். இவரது ஆராய்ச்சி மிக விசேஷப்பட்டதென்று உலகம் முழுவதிலுமுள்ள விஞ்ஞானிகள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இன்றுஅவர் றோமை நகரிலுள்ள சுகாதாரநிலையம் ஒன்றில் நடத்திவரும் ஆராய்ச்சிக்குப் பிரான்சிய, இத்தாலிய அரசாங்கங்கள் பணமுதவுகின்றன.

# கிறகோரியாரின் சர்வகலாசாலை

6 அர்ச்சியசிஷ்டர்கள், 30 முத்திப்பேறு பெற்றவர்கள், 13 பாப்புமார், அநேககருதினால்மார், அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமார், பல்லாயிரக்கணக்கான குருமாரைப்பயிற்றியதாய், பதின்மூன்றாம் கிறகோரியாரின் ஞாபகார்த்தமாய் றோமாபுரியின்மத்தியில் விளங்கிக்கொண்டிருக்கும் கிறகோரியாரின் சர்வகலாசாலையானது அர்ச். லொயலா இஞ்ஞாசியாராலேதான் அடியிடப்பெற்ற நான்காம்நூற்றாண்டு விழாவைச் சென்றஐப்பசி 13-ந் திகதிமுதல் எட்டுத்தினங்களாய் மிக்கபெருமிதத்துடன் கொண்டாடியது. இதனை அடியிடுவதற்கு அர்ச். லொயலா இஞ்ஞாசியாரும், அர்ச். பிரான்சீஸ் போர்ஜியாருமாகிய இருவரும் பெருந்துணையாய்இருந்தனர். இவர்கள் முந்தமுந்தக் கப்பிற்றல்குன்றின் அடிவாரத்திலிருந்த ஓர் சிறுமனையிலே ஓர் கலாசாலையாக இதனை அடியிட்டனர். காலகதியிலே வளர்ச்சியடைந்து தற்போது பேரான சர்வகலாசாலையாகத் திகழும் இதிலே 58 நாடுகளைச்சேர்ந்த 2,388 மாணவர்கள்பல்வேறு சாஸ்திரங்களும் பயின்றுவருகின்றார்கள். இதிலே கடமையாற்றும் பேராசிரியர்கள் நூறுபேரும் உலகின்பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த பெரியபண்டிதர்கள். இன்றும் யேசுசபையாரே இதனை நடத்திவருகின்றார்கள்.

0 0 0

## சுதேச குருமடங்கள்

மிஷன்நாடுகளிலே தற்சமையம் 245 குருமடங்கள் இருந்துவருவதாயும், அவற்றிலே 3,870 குருத்துவமாணவர்கள் பயின்றுவருவதாயும் றோமாபுரியிலே சுதேச குருமாருக்குரிய அப்போஸ்தலரான அர்ச். இராயப்பர்சபைக் கூட்டம்ஒன்றிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இவைகளைப் பராமரிப்பதற்கும், விஸ்தரிப்பதற்குமாக இவ்வருடத்தில் 1 கோடியே 75 லட்சம் பவுண்வரை தேவைப்படுகிறது மிஷன்நாடுகள்ல் 87 சுதேச மேற்றிராணிமாரும், 8,232 சுதேசகுருமாரும் இருந்துவருகிறார்கள்.

## மகாவந். றோச் ஆண்டவர்

தற்போது றோமாபுரியிலே தங்கியிருக்கும் தூத்துக்குடியின் முன்னாள் மேற்றிராணியாரான மகாவந். றோச்ஆண்டவர் தாம் மேற்றிராணித்துவ அபிஷேகஞ் செய்யப்பெற்ற 30-ம் ஆண்டுநிறைவுதினமாகிய சென்றபுரட்டாசிமாதம் 23-ந் திகதியன்று அங்கே முத். பத்தாம்பத்திநாதரின் திருமேனி அடக்கஞ்செய்யப் பட்டிருக்கும் கல்லறைப்பீடத்தில் திவ்வியபூசைப்பலி நிறைவேற்றினார். அடுத்த 27-ந்திகதியன்று நெற்றுனோபட்டினஞ்சென்று அங்கே அர்ச். மரியகொறெற்றியின் கல்லறையைத் தரிசித்தார். ஆண்டவர்அவர்கள் தம்பதவியை இராசிநாமாச்செய்துவிட்டபடியால் இனிமேல் அமதாசா நகரின் மேற்றிராணியாரென அறியப்படுவார். இது பிறீஜியா நாட்டிலுள்ளது. முற்காலத்தில் இதுஓர் மேற்றிராசனமாயிருந்தது. ஆண்டவர்அவர்கள் இந்த ஆண்டின் இறுதிவரையிலே றோமைநகரில் தங்கியிருப்பார்.

0 0 0

## கன்னிகாமடம் சேர்ந்தாள்

கனடாதேசத்தில் டையோன்னே என்பவரது குடும்பத்தில் ஒரேபிரசவத்திற் பிறந்தவர்களும், தற்போது 19 வயதுடையவர்களுமான அதிசயபெண்மணிகள்ஐவரிலும் மரியே டையோன்னே எனும் பெண்பிள்ளை பரிசுத்த தேவதிரவியானுமான தொண்டர்கள்சபைக் கன்னிகாமடத்தில் சேர்வதற்காகக் குவெபெக்நகருக்குப் பிரயாணமாயினாளெனச் சென்ற ஞாயிற்றுக்கிழமை ஒன்ரேறியோவைச்சேர்ந்த நோர்த்வே எனுமிடத்திலிருந்து தந்திச்சமாச்சாரம் கிடைத்திருக்கிறது. இந்தப்பிரயாணத்தின்போது அவள் தனதுதாயாருடனும், மூத்தசகோதரி பவுலினுடனும்சென்றாள். இந்தப்பயணத்தையிட்டு மரியே மிகவும்சந்தோஷமடைந்தாளென அவர் தந்தையார் கூறிநின்றார்.

### கார்த்திகை மாதம

போதுக்கருத்து :— இல்லிட வசதிக்குறை நீங்கும்படியாக வேண்டிக்கொள்வது.

மிஷன்கருத்து :— ஆபிரிக்காவிலே கல்விச்சாலைகளின் சுதந்திரத்திற்காக வேண்டிக்கொள்வது.

### திருநாள் அட்டவணை

**கார்த்திகை மாதம்—1953**

| | | | |
|---|---|---|---|
| வெ | 6 | அ. லெயோனுர், த. | (வெ) |
| சனி | 7 | அ. வில்புரோர்த்தப்பர், மே. | (வெ) |
| ஞா | 8 | இஸ்பிரீத்து ஆகமனத். பின் 24-ம் ஞாயிறு—அ. கொட்பிறே | (ப) |
| திங் | 9 | இரட்சகர்கோயில் அபிஷேகத் திருநாள் | (வெ) |
| செ | 10 | அ. அவலின் பெலவேந்திரர், கு. | (வெ) |
| புத | 11 | அ. மற்தீன், மே. | (வெ) |
| வி | 12 | அ. மற்தீன், பா. வே. | (சி) |

சத்தியவேத

**பாதுகாவலன்**

**1953-ம் ஆண்டு**
**கார்த்திகை மாதம் 5-ந் திகதி**

## தபமும் சிலுவையும்

“நீங்கள் தபஞ்செய்யாவிடில் யாபேரும் அழிந்துபோவீர்கள்” என்பது தேவவாக்கு. அங்ஙனமாக, நமது அறியாமையினுலோ, அன்றேல் அசட்டையினுலோ முறையான தபஞ்செய்வதற்கேற்ற அநேக சந்தர்ப்பங்களைத் தவறவிடுகிறோம். “தன் சிலுவையைச் சுமந்துகொண்டு என்பிறகே வராதவன் எனக்குத் தகுதியில்லாதவன்” (மத். 10-38.) என்பது யேசுநாதரின் திருவாக்கு. என்னைப் பின்செல்ல விரும்புகிறவன் எவனே அவன் தன்னைமறுத்துத் தன் சிலுவையை நாளாந்தம சுமந்து என்பிறகே வரக்கடவான்” என்று லூக்கா (14-27) எழுதுகிறார். “தன் சிலுவையைச் சுமந்து என்னைப் பின்செல்லாதவன் என் சீஷனுயிருக்க முடியாது” என்றும் எழுதப்பட்டிருக்கிறது. தபத்தினதும், சிலுவை சுமப்பதினதும் அவசியத்தை மேற்சொல்லிய வேதாகம வசனங்கள் வற்புறுத்துகின்றன.

நாம் தினந்தோறும் சுமக்க வேண்டிய சிலுவை என்ன? நமது தவிர்க்கமுடியாத கடமைகள், வேலைகள், கஷ்டங்கள், வசதிக்குறைபாடுகள், இல்லாமைகள், இடையிடையேவரும் தாழ்த்துதல்கள் ஆதியன நமது தினமான சிலுவையாகும். முறுமுறுத்துக் குறைகூறுவதற்குப் பதில் வருகிற இக்கட்டுஇடைஞ்சல்களைச் சந்தோஷமாய் வரவேற்றுப் பொறுமையுடனும், உதாரத்துடனும் அனுபவிக்கும்போது நமது தினமானசிலுவையைநாம்சுமக்கிறோம். பிறர் குற்றங்களை மன்னித்து, அவர்கள் மட்டிலே அன்பாதரவு காட்டும்பொழுது தபஞ்செய்கிறோம். நடைமுறைக்கேற்ற இந்தத்தபமும், சிலுவைசுமப்பதும் பிறருடன் நாம்உராசிக்கொள்ளாமல் தடுக்கும். அதனுல் நமதுபழக்கவழக்கங்கள் புனிதமடைந்து யோக்கியமுள்ள ஸ்திரீபூமான்களாவோம்.

நாம் தேடித் தெரிந்துகொள்ளும் தபத்திலும்பார்க்க நாம் தேடாமலே தெய்வாதீனமாய் நமக்குவரும் துன்பதுயரங்களைப் பொறுமையுடன் சகிப்பது சிறந்ததபமும், அதிகபலனுள்ளதுமாகும். இவைகள் நாம்பிறருடன் இலகுவாகப் பழகிக்கொள்ளவும், விடாப்பிடியுடனும் பக்தியுடனும் நாமே நம்மைத் திருத்திக்கொள்ளவும் உதவிசெய்யும். பலமுறையும் நமது பழைய அனுபவங்களிலிருந்து நாம யாதும் கற்றுக்கொள்வதில்லை. அதனுல் நமது சீவியத்தை இலகுவாக்கி உத்தம முறையாகத் தபஞ்செய்யும் அரியசந்தர்ப்பங்களை இழந்துபோகிறோம். தேவசிந்தையும், நன்மனமும், நம்மைத்திருத்தப் பொறுமையுமிருந்தால் நாள் முழுவதையும் தபக் கோலம் கொள்ளச் செய்யலாம்.

இவ்விதம் தபஞ்செய்வதற்கு மற்ருேர் நியாயமும்உண்டு. உத்தரித்தல்லாது வேறே விதமாய்த் தங்கள்கடனை இறுக்கமுடியாத உத்தரிப்புஸ்தல ஆத்துமாக்களுக்கு இந்தத்தபமுயற்சிகளின் பலன்களை ஒப்புக்கொடுக்கலாம். அவர்களுக்குப் பதிலாக நாம் வருந்துவதினுலே அவர்களுடைய தாங்கொணு வேதனையை நாம் தணிக்கக்கூடும். விரும்பத்தக்கதும், மிகவும் கவர்ச்சிகரமுமான பிறர்நேசம் இதுவாகும். சீவந்தராய் இருப்பவர்களுக்கு நாம்செய்யும் உபகாரத்தை அவர்கள் மதிக்கவறியார்கள். அதிகமாய்மறந்துபோவார்கள். ஆனுல், உத்தரிக்கிறஆத்துமாக்களோ நன்றியுள்ளவர்களாயிருந்து நாம்செய்யும் உதவியை நன்குமதிப்பார்கள். நாம்செய்யும் உதவியை நமதுநேரமவரும்பொழுது நமக்குச்செய்வார்கள். அன்றியும் அவர்களுக்குச்செய்யும் உதவியைத் தமக்கேசெய்வதாக யேசுநாதர் மதிப்பார். அவர் தாராள மனதுள்ளவர்.

“வறியவர்களுக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் அளிக்கிறுன்; அவர் அவனுக்குத் திருப்பிக்கொடுப்பார்.” (பழ. 19-17) உத்தரிக்கிறஸ்தல ஆத்துமாக்களுக்குப் பதிலாக நாம் உத்தரிப்பதால் ஒன்றையும் இழந்துபோக மாட்டோம். ஆனுல், இத்தகைய உதவியும், தபமும் நமக்கு உபயோகமாகி நமது ஞானப்பொக்ஷங்களையும் அதிகரிக்கச்செய்யும்.

நாம் செய்வதற்குக் கஷ்டமாயிருக்கும் தபமுயற்சிகளை இந்த ஆத்துமாக்களுக்காகச் செய்யத் தேடும்பொழுது அது இலகுவாயிருக்கும். வெயிலையும், மழையையும் திட்டுவதிலும் பார்க்க, அவைகளைப் பொறுமையுடன் சகிப்பதினுல் உத்தரிக்கிறஸ்தலத்தில் வேதனைப்படுகிற ஆத்துமாக்களுக்கு உதவுகிறோம்என்ற சிந்தனை அவைகளைச் சகித்துக்கொள்ள உதவும். பிறருக்குச் செய்யும் உதவியினுல் நாமே முதல்பலனடைகிறோம் என்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கதென்க.



## சதாசகாயமாதா கோணம்

### கண்ணீர்விடும் கன்னித்தாயார் சுரூபம்

இத்தாலிக்குத் தெற்கேயுள்ள சிசிலிதீவிலே சிறுக்குஸ்நகரின் அதிமேற்றிராணியார் அந்நகரில் பிரபலமடைந்துவரும் “கண்ணீர்விடும் கன்னித்தாயாரின்திருச்சுரூப”த்தைப்பற்றி நுணுக்கமாக விசாரணை நடத்தி அறிந்துகொண்ட விபரங்களைப் பரிசுத்த பாப்பாசருக்கு நேரில் தெரிவிக்கும்பொருட்டு வத்திக்கான் மாளிகை சென்றிருக்கிறார். அச்சுரூபத்தின் வரலாறு பின்வருமாறு:

சிறுக்குஸ்நகரில் ஆஞ்செலோ என்ற தொழிலாளிக்கும், அந்தோனினுஎன்ற மாதுக்கும் விவாகம் நடைபெற்றபோது இனசனரும், மித்திரருஞ் சேர்ந்து உபகரித்த வெகுமதிகளில் தேவமாதாவின் சுரூபமும் ஒன்று. இது வெள்ளைக்களிமண்ணுல்செய்து வர்ணந்தீட்டப்பெற்ற சொற்பவிலையுள்ள ஓர் சாதாரணசுரூபம். ஆஞ்செலோ வேதகடமைகளை அனுசரிப்பதில்லை. கோவிலுக்குப் போவதில்லை. அவன் ஒரு பொதுஉடைமைக்காரன் (கம்யூனிஸ்ற்) என்று சனங்கள் பேசிக்கொள்வார்கள். அந்தோனினு அவ்வளவு கேவலநிலையில் இல்லாதபோதிலும் அவளைத் தெய்வபத்தியுடையவளென்று சொல்வதற்கில்லை

அந்தோனினு கர்ப்பவதியானபோது அவள் வேலைக்குப்போகாது வீட்டில் தங்கியிருக்க வேண்டி நேர்ந்தது. இது ஆஞ்செலோவுக்குப் பிடிக்கவில்லை. நாளாந்தம் பேச்சும், ஏச்சுந்தான். ஒருநாள் அவன்கோபம் எல்லைகடந்துபோகவே, அந்த மாதாசுரூபத்தை உடைத்தெறியப்போவதாகச் சபதங்கூறினுன். படுக்கையில் இருந்த அந்தோனினு கவலைமேலீட்டினுல் அழத்தொடங்கினுள். படுக்கை அறையில் இருந்த சுரூபத்தை நோக்கினுள். என்ன அதிசயம்! சுரூபத்தின் கண்களிலுமிருந்து நீர்த்துளிகள் வடிந்துகொண்டிருந்தன. தான் காண்பது கனவானவா என்று அவளுக்குச்சந்தேகம் தோன்றியது. ஆனுல், அச்சமயத்தில் அங்குவந்துசேர்ந்த உறவினரும் சுரூபத்தின் கண்களிலிருந்து நீர் வடிவதைக் கண்டார்கள். குருட்டுநம்பிக்கையுடைய அந்தப் பாமரமக்கள் “இந்தவீடு சாபத்துக்குள்ளாய் இருக்கவேண்டும்” என்று கூறுவாராயினர்.

இந்த அதிசயசம்பவம் காட்டாக்கினிபோலப் பட்டணம்முழுவதும் பரவிவிட்டது. கூட்டங்கூட்டமாக அந்நகரமக்கள் ஆஞ்செலோவின்வீட்டுக்கு வருவதும் போவதுமாய் இருந்தார்கள். நகரசபைத் தலைவரும், பொலிஸ் அதிபரும் அங்குசென்று பார்வையிட்டுத் திரும்பினர்.

சென்ற ஆவணிமாதம் 29-ம் திகதியிலிருந்து புரட்டாசிமாதம் 1-ந்திகதி காலை 11-30 மணிவரையில் அந்தச் சுரூபம் கண்ணீர்சிந்திய வண்ணமேயிருந்தது. சுரூபத்திலிருந்து வடிந்த கண்ணீர் பிரபல வைத்தியநிபுணரால் பரிசோதிக்கப்பட்டது. அது சகல விதத்திலும் சாதாரணமனிதரின் கண்ணீரையே ஒத்திருந்ததென அவர்கள் அறிக்கையிட்டிருக்கின்றனர்.

அதன்பின் ஒருமாதத்தில் மாத்திரம் 300-க்கு மேலான புதுமைகள் நடைபெற்றதாகச் சொல்லப்படுகிறது. 18 வருடகாலம் கண்பார்வை இழந்திருந்த மரியா சிருக்கோ—56 வயதுடைய மாது—அந்தக்கண்ணீரில் நனைத்தபஞ்சைத் தன்கண்களில் ஒத்தியவுடன் மீண்டும் பார்வையை அடைந்தாள்,

இருகால்களிலும் இளம்பிள்ளைவாதத்தால் பீடிக்கப்பட்டு நடக்கமுடியாதிருந்த வின்செஞ்சோ கார்ப்பின்திரி என்ற ஏழுவயதுப்பையன் குணமடைந்து இப்போ நடக்கிறுன்.—மூடக்குவாதத்தால் பீடிக்கப்பட்டிருந்த நுன்சியோவின்சி என்றதொழிலாளி திடீரெனக் குணமடைந்தாள்.

பிரபல இத்தாலிய கம்யூனிஸ்தபத்திரிகையான ‘யூனித்தா’வின் நிர்வாகஸ்தர்களுள் ஒருவராகிய “மிஸ் யூனித்தா 51” என்பவள் மூளை அழற்சி வியாதியாற் பீடிக்கப்பட்டு மரணப்படுக்கையில் இருக்கையில் அற்புதமாகச் சுகமடைந்தாள். இப்படியே எத்தனையோ புதுமைகள் நடப்பதாகச் செய்திகள் எட்டுகின்றன.

இந்தஉற்பன்னத்தால் ஏற்பட்டபத்தி அருட்சியானது உலகத்தின் பாவாக்கிரமங்கள்மட்டில் தேவதாயாருக்கு உள்ள வியாகுலத்தை எடுத்துக்காட்டுகின்றது. நாம் பாவவழியைவிட்டுத் தமது திருச்சுதனின் பக்கமாகத்திரும்பவேண்டுமென்று அவ நினைப்பூட்டுகிறு—அழுதழுது நினைப்பூட்டுகிறு. நமது பாவங்களுக்காக நாமும் கசிந்துருகிக் கண்ணீர்சிந்திக்கன்னித்தாயாரின் கருணையைப் பெற்றுக் கடைத்தேறப் பிரயாசப்படுவோமாக!

### இஸ்பிரீ. ஆகமனத்தின் பின் 24-ம் ஞாயிறு

**சுவிசேஷ வாசிப்பு**

(மத். 13: 24—30)

அர்ச். மத்தேயு எழுதிவைத்தபடி பரிசுத்த சுவிசேஷத்தின் தொடர்ச்சி :— அந்தக்காலத்திலே யேசுநாதர் சனத்திரள்களுக்கு இந்த உவமையைச் சொல்லியருளினுர். பரலோக இராச்சியமானது தன்வயலில் நல்லவிதையை விதைத்த மனுஷனுக்கு ஒப்பாயிருக்கின்றது. ஆனுல், ஆட்கள் நித்திரைசெய்கையில் அவனுடைய மாற்ருன் வந்து கோதுமை நடுவில் தகரைகளை விதைத்துவிட்டுப் போனுன். பயிர்வளர்ந்து கதிர் விட்டபோது, தகரைகளும் காணப்பட்டன. அப்போது குடும்பத்தெசமானுடைய ஊழியர் அவனண்டையில் வந்து: ஐயா, நீர் உம்முடைய வயலில் நல்லவிதையை விதைத்ததில்லையா? அப்படியானுல் தகரைகள் எங்கிருந்து உண்டாயினவென்று கேட்க, அதற்கு அவன்: இதை மாற்ருன் செய்தான் என்ருன். அப்போது ஊழியர்: நாங்கள்போய் அவைகளைப் பிடுங்கிப்போட உமக்குச் சித்தமோ? என்று கேட்டார்கள். அதற்கு அவன்: வேண்டாம், தகரைகளைப் பிடுங்கும்போது அவைகளோடுகூட ஒருவேளை கோதுமையையும் வேர் அறுத்துப் போடுவீர்கள். ஆனதால், இரண்டையும் அறுப்புக் காலம் வரையில் வளரவிடுங்கள். அறுப்புக் காலத்தில் நான் அறுப்புக்காரரைப் பார்த்து: முந்தத் தகரைகளைச் சேர்த்து அவைகளைச் சுட்டெரிக்கும்படி கட்டுகளாகக் கட்டுங்கள்; கோதுமையையோ, என் களஞ்சியத்தில் சேர்த்துவையுங்கள் என்பேன் என்று சொன்னுன் என்று திருவுளம்பற்றினுர்.

## பாஷை முன்னேற்றத்துக்குச் சூழ்நிலை அவசியம்

சென் பெனடிக்ற் கல்லூரித் தமிழ் இலக்கியசங்கம் தனது ஆரும்ஆண்டு நிறைவுவிழாவைச் சமீபத்திலே சிறப்பாக நிகழ்த்தியது. தமிழ்மொழிக்குத தளராத்தொண் டாற்றிவரும் தனிப் பெருமைவாய்ந்த வண. சுவாமி S. X. தனிநாயகம், D. D., M. A., M. Lit. அவர்கள் பிரதமஅதிதியாக அமோக வரவேற்புடன் உபசரிக்கப்பெற்றார். வழமைப்பிரகாரம் அவர் வந்தனப் பாவால் வாழ்த்தவும், பூமாலைகள்சூட் டவும்பெற்றுக் கல்லூரிஅதிபர் சங். பிறதர் ஒலிவர்,B. A., B. SC. அவர்கள், கழகத்தலைவர்சமேதராய்க் கல்லூரி மண்டபமேடைக்கு அழைத்துச்செல லப்பட்டார். அவர் சங்கஅழைப் பிதழை ஏற்றுக்கொண்டதற்காகக் கல் லூரி அதிபர் கல்லூரியின்சார்பாக நன்றிதெரிவித்ததும், கழகத்தின் ஆண்டுஅறிக்கை வாசிக்கப்பட்டது. அதைத்தொடர்ந்து பேச்சுப்போட்டி யாளர் உணர்ச்சிததும்பிய தங்கள் சொற்பொழிவுகளால் மண்டபத்தில் குழுமியிருந்தாரின் உள்ளங்களைப் பா வசப்படுத்தினர்.

பிரதமஅதிதி பேச்சாளருக்குப் பரி சில்கள்வழங்கியபின், தமிழன்னையின் தனிச்சிறப்பை எளியமுறையில் எடுத் துரைத்தார். அவர் பேசுகையில்: தாம் கடைப்பிடித்தொழுகும் சிற்சில கொள்கைகளைக்கொண்டு பண்டைக் காலத் தமிழ்மக்களிடையே பரவி யிருந்த பாராட்டக்கூடிய பண்பாடுகளை விரித்தோதினார். தற்காலமனிதன் மலர்மாலை சூட்டப்பெறின் அதை உடனே கழற்றிவிட்டுத்தான் தன்கரு மத்தில் ஈடுபடுவான். ஆனால், அப்படி யல்ல, பண்டைக்காலத்தமிழன். பற் பலவிஷயங்களில் ஈடுபடுந்தோறும் பற் பலவிதமான தார்களை அணிந்துசெல்வ தில் பேரவாப்பிடித்திருந்தான். போ ருக்குப்புறப்பட ஒருவிதமாலை; ஆ னிரைகவர வேறுவிதமாலை; வெற்றிச் சின்னம் ஒருவகைத்தார்; தோல்விச் சின்னம் இன்னொன்று. தான் தமி ழன்என்பதை இவ்வாறு வேற்றின அடையாளங்கள்கொண்டு வெளிப் படுத்திமகிழ்ந்த தமிழனுக்குத் தோன் றியமக்களின் நிலையென்னே! தான் தமிழன்என்று சொல்லவே வெட்க மடைகிறான் இந்நாள்தமிழன்.

மேலும் தமிழன்னையின் வளர்ச் சிக்கு வீட்டுச்சூழ்நிலை அத்தியாவசி யம்என்பதையும் சுவாமிகள் வற்புறுத் தினார். கொழும்பில்வசிக்கும் மாணவ ரிற் பெரும்பாலானோர் தனித்தமிழ் பேசுவதில்லை. வீடுகளிலேயே கலப் புப்பாஷையைப் பேசுவதால் பிள்ளைக ளும் பெற்றோரைப்பின்பற்றிக் கலப் புத்தமிழையே பேசிவருகிறார்கள்என் பதை ஒருசிறு சம்பவத்தைக்கொண்டு திருஷ்டாந்தப் படுத்தினார். வண. சுவாமிஅவர்கள் ஒருசமயம் ஒருவீட் டுக்குச் சென்றிருந்தபோது ஐந்து பிராயமுடைய ஒருசிறுவனை அழைத்து, அவனது சரீரஉறுப்புக்க ளிற் சிலவற்றைச் சுட்டிக்காட்டி, அவைகளின் பெயரைக்கேட்டார். சிறுவன் காதுக்கு 'இயர்' (Ear) என் றும், பல்லுக்குப் 'bபல்' என்றும், கண்ணுக்கு 'அஸ' (சிங்களம்) என்றும் விடைபகர்ந்தான். இத்தகைய சூழ் நிலையின்மத்தியில் தமிழ்த்தாய் தலை நிமிர்த்துவது எப்படி? இத்தால் பிற பாஷைகளைப் பிள்ளைக்குக் கற்றுக் கொடுக்கக் கூடாதென்பதன்று. இள மைப்பிராயத்தில் தமிழ்மொழிக்கு அசைவற்ற அத்திவாரமிட்டபின் பிற பாஷைகளைப் பயிற்றுவித்தல் பாதக மில்லை. தமிழ்மொழியின் தற்போ தைய தாழ்நிலைக்கு மக்களிடையே தாவியுள்ள பிறபாஷைமோகம்தான் முக்கியகாரணம். மற்றொருகாரணம், தமிழ்ப்பாஷையின் தொன்மை. பின் னையகாரணம் தமிழ்த்தாயின் முன் னேற்றத்துக்குத் தூண்டுகோலாக இருக்கவேண்டியது. தன்தாய் லத் தீன்போன்ற பாஷைகளைப் போல் தொன்மைகாரணமாக இறந்துபடா மல் இப்பொழுதும் கன்னிப்பருவம் அடைந்திருப்பதையிட்டுக் கர்வங் கொண்டு அதன்பால் இன்னும் நிரம் பிய ஆர்வங்கொள்ள வேண்டியது ஒவ் வொருதமிழனுடையவும் கனத்தகட னாகும்.

இவ்வின்சுவைச் சொற்பொழிவின் பின் கழகமாணவர் "மமதையின் அழிவு" என்னும் பெயர்பொருந்திய ஒருசிறிய நாடகத்தைப் பாராட்டக் கூடியவகையில் நடித்து இவ்வாண்டு விழாவைச் சிறப்பித்துமுடித்தனர்.

# ஆத்துமாக்களின் அபயக்குரல்

[நிலைமண்டல வாசிரியப்பா]

தேவனின் தாயார் திருவருள் இரந்து
ஆவலாய்க் கேளுமெம் அபயக் குரலை
உத்தரிப் புத்தல உறுதுய ரதனை
எத்திறம் உமக்கு இயம்புவம் நாமே!
நிகரிலா வாதை நினைக்கொணு வேதனை
பகரொணுத் துன்பம் படுகிறோம் அந்தோ!
அவியா நெருப்பின் அக்கினிச் சுவாலைமுன்
புவியின் நெருப்பெலாம் பொறியா மன்றே!
நிலவுல கில்யாம் நிலவிய காலை
புலவர்கள் புகன்ற பொருளுரை மறந்தோம்
குரவர்கள் கூறிய தவநெறி தவறிப்
பரகதி சேரும் பாக்கியம் இழந்தோம்
அஞ்சியும் கெஞ்சியும் அழுதும் தொழுதும்
எங்களால் ஆவதொன் றெங்கட் கிலையினி
உங்களாற் றெனமக் குண்டு நற்பேறு
பூரண பலனும் புண்ணிய மொன்றைநம்
காரணங் கருதிக் காட்ட லாகாதோ?
பெற்றதாய் தந்தாய்! பிரிய சோதரர்காள்!
என்றுநாம் உம்மை இங்கிருந் தழைத்தால்
கேளார் போலக் கேளீர் நீவிர்
வாளா விருந்தால் வாதை நீங்குமோ?
கற்புயர் நற்பெரும் கன்னியர் சபையீர்!
பெட்புறு துறவறம் பேணும் துறவிகாள்!
கார்த்திகை ஓர்மதிக் காலமே என்கிலும்
பார்த்துமைக் கேட்பதைப் பரிவாய்க் கேண்மின்!
திவ்விய பூசை தினமும் கண்டும்
திவ்விய நன்மையைச் செவ்விதே பெற்றும்
பொறுபொறு வென்று கண்ணீர் உதிரச்
சிலுவைப் பாதையைச் சீர்பெறச் செய்தும்
மரியாள் விரும்பும் மந்திர மாலையைப்
பிரியத் துடனே பலருடன் செபித்தும்
வறியோர்க் கீந்தும் வன்பசி களைந்தும்
அறிவில் லார்க்குநல் லறிவினை ஊட்டியும்
இன்ன பிறவுமாய் எய்திடும் பலன்களைக்
கன்னிகை வழியாய்க் கர்த்தருக் களித்து
எம்மை மீட்பிக்க இன்றே எழுமின்!
அருள்மிகு மரியாள் திருவருள் இரந்து
ஒருவரம் பெறுவீர் உற்றார் நீரே!
பட்டிடும் கடனைப் பரகதி சேர்ந்ததும்
வட்டியும் முதலுமாய்த் தருவோம் யாமே.

— நவயுவன், 'காரம்பன்.

## ஆசிரியர்களுக்கு அறிவித்தல்

வழக்கமாக மாதமுடிவில் அனுப்பும் "ஆசிரியர்களின் விதவைகள், அனாதைகள் உபகாரச் சம்பளப் பத்திரம்" (Teachers' Widows' & Orphans' Pension Fund) மாதாந்தம் அந்தந்த மாத 3-ம் திகதிக்குள் எமது கந்தோரில் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கும்படி தலைமைஆசிரியர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

**T. A. J. Mathuranayagam,**
Gen. Manager, R. C. Schools.
Jaffna 4-11-53.

## பொது வர்த்தமானம்

### அந்த அதிசய பெண்மணிகள்

கனடாதேச காலன்டர்எனுமிடத் தில் ஒரேபிரசவத்தில்பிறந்து உலகில் மிகவும்கீர்த்திபெற்ற டையோன்னே பெண்குழந்தைகள்ஐவரும் தற்போது 19வயசை அடைந்துவிட்டார்கள். அன்னெற்றி, செசிலி, எமிலி, மரீயே, யொவான்னே என்ற இந்தஐந்துபெண்க ளிலும் நான்காம்ஆளான மரீயே ஓர் கன்னிகாஸ்திரியாக எண்ணியிருக்கின் றாள். அவர்களில் இவள்தான் அதிகஞ் சிறியவளும், அதிகம் நாணமுள்ளவளு மாவள். ஏனையவர்கள் இவளைப்பின் பற்றிக் கன்னிகாபதவியைத் தெரிந்து கொள்வார்கள் போலில்லை. இவர்கள் ஒவ்வொருவரும் சொந்தமாகத் தனித் தனியே பதினைந்துலட்சம்ரூபா பெறு மதியான சொத்தைக்கொண டிருக்கி றார்கள். ஒரேமாதிரியான உடைக ளையே இன்னமும் அணிந்துகொண்டும், அதேமாதிரியாகவே தலைமயிரைச் சீவிக்கொண்டும் வருகிறார்கள். இவர்க ளின் தந்தையான பப்பாடையோன்னே இப்போது சுபீட்சமுடைய ஓர்கமக் காரனாய் இருந்துவருகிறார்.

### வெற்றிகொண்ட வீரர்

இற்றைக்குப் 12 வருடங்களின் முன்னே ரிருக்றர் விபத்து ஒன்றில் தனது இருகரங்களையும் இழந்து போன 30 வயசுள்ள ஜிம் பாக்கின்சன் என்பவர் மாட்சிமைதங்கிய எலிசபேத் மகாராணியாரும், அவர் நாயகரான எடின்பேர்க்கின் டியூக்கோமகனும் நியூசிலாந்தைச் சேர்ந்த கிறைஸ்ற் சேர்ச் எனுமிடத்தை, அடுத்த தை மாதம் தரிசிக்கும்போது, அவர்களைச் சந்தித்து, பிறரின் உதவியில்லாமல் தான் எவ்வாறு டைப்அடிக்கமுடியும், சவரஞ்செய்யமுடியும், சாப்பிடமுடி யும், பானம்பருக முடியுமென்பதை அவர்களுக்குக் காண்பிக்கவிருக்கின் றார். இவர் தனக்குள்ள சக்திக்குறை வைக் கிழக்குவங்காளத்திலே ஓர் றெ யில்வே இஞ்சினியராயிருந்து இளைப் பாறித் தற்போது நியூசிலாந்தில் வசித் து வருகின்ற திரு. ஏ. டபிள்யு. ராவ் என்பவர் கண்டுபிடித்துச்செய்த இயந் திரசாதனத்தைக் கொண்டு நிவிர்த்தி யாக்கி வெற்றிபெறலாயினர். றேடி யோவை இயக்குகிறவரான இவர் 16 அங்குலநீளமுள்ள யந்திரக்கரங்கள் கொண்டு தனக்குள்ள திறமையை இராச தரிசகர்களுக்குக் காண்பிக்க விருக்கின்றார்.

### இருண்ட பாதாளச்சிறை

கடவுளைக் கையெடுத்துத் தொழ அனுமதி கேட்டார், போலாந்திலிருந்து கோறியாபோய்ச் சேர்த்த போலிஷ் பிரதிநிதிஒருவர். அவரது கம்யூனிஸ்த எசமான்கள் அனுமதிக்க மறுத்தனர் இஷ்டம்போல இறைவனை வேண்டுவ தற்குக்கூட உரிமைஇல்லாத கூட்டத் தாரோடு என்ன உறவுஎன்று இந்தப் போலிஷ்அதிகாரி ஜோன் ஹாஜுகிவிஸ் தப்பிவந்து சுதந்திர உலகின் பக்கம் சேர்ந்துவிட்டார். கம்யூனிஸ்தர்களி டம் சிக்கிக்கொண்டுள்ள போலாந்து "இருண்ட பாதாளச்சிறை" என்று அவர் வர்ணிக்கிறார். "எங்கள் போ லாந்தில் நாஸிகள் ஆண்ட போதும் காவற்கூடங்கள் இருந்தன; இப்போ தும் இருக்கின்றன; வித்தியாசம் என்ன என்றால், அப்போது சித்திர வதை செய்தோர் நாஸிகள்; இப் போது கம்யூனிஸ்தர்கள்" என்று அவர்மனம் புழுங்கிச் சொல்லுகிறார். மனிதனுடைய விடுதலை உணர்ச்சியை எவராயினும்சரி, எக்காலத்தும் அடக்கி வைத்திருக்க முடியாது; அந்த உணர்ச்சி பீறிட்டுக்கொண்டு விடுத லைச் சூறாவளியாகப் பெருகுவதுதிண் ணம்; அண்மையில் இரும்புத்திரை ஜேர்மனியில்தொழிலாளர் கம்யூனிஸ்த எதிர்ப்பில் எழுச்சியுற்றது ஓர் முக்கிய மான அறிகுறியாகும்" என்றும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

### ஆகாயவிமானங்களின் வேகம்

சமீபத்திலே லண்டன்-நியூசிலாந்து ஆகாயப்பந்தையத்தில் ஈடுபட்ட ஜெற் விமானங்கள் மனோகற்பிதத்திலும் சற் றே குறைந்தவேகத்தில் இலங்கைக்கு மேலாக இரைந்துசீறிக்கொண்டு பறந்துசென்றன. 2-வது உலகயுத்தம் முடிந்தகாலமுதல் ஆகாயவிமான வேகம் அதிகரித்துக்கொண்டே வரு கிறது. என்றாலும் சப்தத்தின்வேகத் தை அவைகள் இன்னும் எட்டவில்லை. சப்தம் ஐந்துசெக்கனுக்கு ஒருமைல் வேகத்திலே செல்லுகின்றது. யுத்தம் முடிந்தபின் 1945-ம் ஆண்டு வில்சன் எனும்விமானி (பிரித்தானியர்) மணி ஒன்றுக்கு 606 5 மைலும், 1946-ம் ஆண்டு டொனல்ட்சன் (பிரித்.) 616 மைலும், 1947-ம் ஆண்டு வோயிட் (அமெரிக்கர்) 623·8 மைலும், கால்ட் வெல் (அமெ.) 640·7 மைலும், கார் (அமெ.) 650·6 மைலும், 1948-ம் ஆண்டு ஜோண்ஸன் (அமெ.) 670·9 மைலும், 1952-ம் ஆண்டு நாஷ் (அமெ) 698·5மைலும், 1953-ம்ஆண்டு பாண்ஸ் (அமெ.)715 6மைலும், 1953-ம்ஆண்டு டியூக் (பிரித்.) 727·6 மைலும், லித்கோ (பிரித்.) 737·3 மைலும், வேர்டின் (அமெ.) 742· 7 மைலும் பறந்து பிர சித்திபெற்றிருக்கிறார்கள். சமீபத்தில் சிலவிமானிகள் இன்னும்கூடியவேகத் தில் பறந்தும் அதிகாரமுறையில் இன் னும் வெளிவரவில்லை.

— ஓர் குறிப்பிட்ட இடத்திற்குச் சென்று குறிக்கப்பட்ட பொருள்ஒன் றைத்தாக்கிச் சேதப்படுத்தியபின் மறு படியும் தான்புறப்பட்ட இடத்துக்கு வந்துசேரக்கூடிய புதியறொக்கெற் ஆயு தம்ஒன்றைப் பிரித்தானி சமீபத்தில் கண்டுபிடிக்கக்கூடிய நிலையில் இருக் கின்றதாம். அங்குள்ள பிரபல விமா னங்கட்டும் கம்பெனி ஒன்றிலே அதைக் கண்டுபிடித்துச்செய்ய விஞ் ஞானிகள் முயற்சித்துவருகின்றார்கள்.



# பாலர்  பக்கம்



## அண்ணா சொல்வது:

அருமைச் சகோதரங்களே!

மழை பெய்திருக்கிறது. தெருக்கள் சில சன நடமாட்டத்தினாலே சேருகிவிடும். இப்படிப்பட்ட ஒரு பாதையிலே ஒரு சிறு பையன் நடந்து போனான். தண்ணீர் நிறைந்திருந்த கிடங்கைக் கவனியாமல் காலை வைத்தான். கால்அடி சறுக்கி விழுந்து விட்டான்.

விழுந்தவன் எழுந்திருக்க முயன்றான். பாதத்தில் நோவு கண்டதினால் நடக்க முடியவில்லை. அவ்வழியாய் வந்த ஒரு மனிதன் அவனுடைய துன்பத்தை அறிந்து அவனைத் துடைத்துத் தூக்கிக் கொண்டு போய் வீட்டில் விட்டான்.

இம்மாதம் உத்தரிக்கிற ஸ்தலத்தில் இருக்கும் ஆத்துமாக்களுக்கு உதவி செய்ய வேண்டிய காலம். மோட்சம் செல்லும் வழியில் கொஞ்சம் தவறினதால் அந்தப் பாவங்களுக்கு உத்தரிக்கிறார்கள். அவர்களுடைய வேதனையைக் குறைத்து, அவர்கள் சீக்கிரம் மோட்சஞ் சேர நீங்கள் உதவி செய்ய வேண்டும்.

பூசைப்பலி ஒப்புக் கொடுத்து, சற்பிரசாதம் உட்கொண்டு கிடைக்கும் ஞானப்பலனைக் கொண்டு இந்த ஆத்துமாக்களுக்கு இளைப்பாற்றி கொடுங்கள். செபமாலை, சிலுவைப்பாதை, தேவ நற்கருணைச் சந்திப்பு, ஒறுத்தல் முதலியவைகளாலும் அவர்களுக்கு உதவி செய்யலாம்.

உத்தரிக்கிற ஆத்துமாக்கள் கிறீஸ்துநாதரில் எங்கள் சகோதரர். சகோதர நேசத்தின் நிமித்தம் இந்த உதவியைச் செய்யுங்கள். சுபம்!

உங்கள் அன்புள்ள
அண்ணா

## உன்னைப் போல்

'ஜெயம்'

1

சின்னக் குட்டி நாயே! நான்
செய்யும் நன்றி மறவாமல்
உன்னைப் போலே உழைத்திடுவேன்
ஊக்கம் கொண்டே வாழ்ந்திடுவேன்

2

பாலைப் பொழியும் பசுவே! நான்
பாரில் உன்போல் உதவிடுவேன்
சாலச் சிறந்த உன்குணமாம்
சாந்தம் கொண்டே வாழ்ந்திடுவேன்

3

குட்டி ஆடே! உன்னைப்போல
குதித்துக் குதித்து ஆடிடுவேன்
பட்டுச் சிட்டே! உன்னைப்போல்
பறந்து, பறந்து, வாழ்ந்திடுவேன்

4

வண்ணப் புறாவே! உன்னைப்போல்
வஞ்சம், சூது அறியாமல
மண்ணும், விண்ணும் போற்றிடவே
மாசில் லாமல் வாழ்ந்திடுவேன்

## ஆசிபெறும்

ஒரு புகைக் கப்பல் நீல நீர்ப் பரப்பான பசிபிக் சமுத்திரத்தைப் பிளந்து சென்றுகொண்டிருந்தது. தென் அமெரிக்காவில் உள்ள ஓர் இடமே அது தேடிச் சென்ற துறை. அதன் மேற் தளத்திலே ஒரு கருதினல் ஈசிச்சேரில் ஓய்வு எடுத்துக் கொண்டு இருந்தார். அவர் தமது பவுண் சங்கிலியையும், சிவந்த உச்சித் தொப்பியையும் கழற்றிப் பக்கத்தில் வைத்திருந்தார். தூரத்தில் நின்று அதைக் கவனித்த ஒரு சிறுவன் ஓடிச்சென்று சங்கிலியையும், தொப்பியையும் எடுத்தான். அவற்றை அணிந்து கொண்டு ஒய்யாரமாக உலாவினான். அப்போது அந்தச் சிறுவனின் தகப்பன் அவைகளைப் பறித்தான். கருதினல் பச்செல்லி (தற்போது திருச்சபையை ஆட்சி செய்து வரும் பாப்பாசர்) சொன்னார்: "அவனைச் சும்மா விடுங்கள்; சிறுவர்கள் தொடுவதெல்லாம் ஆசி பெறும்" என்றார்.

* * *

### மெத்த வித்தியாசம்

தாய் கொடுத்த சாப்பாட்டை உண்ண மகன் மறுத்தான். சிணுங்கினான். அப்பொழுது தாய்: மகனே, நீ எப்போதும் சின்ன யேசுவைப்போல் இருக்க வேண்டும் அல்லவா? சின்ன யேசு தமக்குக் கிடைத்த சாப்பாட்டைக் கொட்டினவரும் அல்ல; அதைத் தின்ன மறுத்தவரும் அல்ல. நீ ஏன் சிணுங்கிப் பிடிவாதமாய் இருக்கிறாய்

அதற்கு மகன்:— சின்ன யேசு தமக்குக் கொடுத்த சாப்பாட்டைத் தின்ன மறுக்கவில்லைத் தான்; ஆனால், அதைச் சமைத்துக்கொடுத்தது யார்? தேவமாதா அல்லவா? —M. J. M.

## அருட்பிரகாசம்

அவளைப் பார்! பச்சைப் பசுங்கிளி போன்ற அழகு. கறுகறு என்ற மலர் விழிகள். அலைபோன்ற கருங்கூந்தல். பூணுக்குப் பூண்போன்ற அலங்கார ஆடை ஆபரணங்கள். யாவரையும் கவரும் இந்த அழகி யாரோ? இவள் தான் பெத்தானிய பட்டண தனவானின்மனைவியான மரியமதலேன். தக்க வயதில் இவள் ஓர் பிரபுவை மணந்தாள். அவர் இறந்து விடவே இவள் விதவையானாள்.

பூவைக் கண்ட வண்டுகள் சும்மா போகுமா? கணிகையை நாடும் காமுகர்கள் கணவனை இழந்த இந்தக் காரிகையை நாடினர். மங்கை மரியாளும் மயங்கி அவர்களின் பாசவலையில் சிக்கினள். அதிமுதல் அரண்மனை போன்ற அவள் இல்லம் கயவருக்கு உறைவிடமானது. மரியாள் தனது மானம் மரியாதை யாவும் இழந்தாள்.

"நீதிமான்களை அல்ல, பாவிகளையே நான் தேடிவந்தேன்" என்று திருவாய் மலர்ந்த கருணையுள்ள கர்த்தர் அவள்பால் இரங்கினார். அன்பே உருவான எம்பிரான் யேசு பிரசங்கம் செய்கிறார் என மரியாள் கேட்டதும் ஏதோ ஒருசக்தி அங்கே அவளை இழுத்துச் சென்றது. கல்நெஞ்சை உருக்கும் அவர் உபதேசம் மரியாளின் அகக்கண்ணைத் திறந்தது. தன் பாவங்கள் மலைபோல் எழுந்து தன்னை நசுக்குவதாகக் கண்டாள். மனம் மாறினாள். பச்சாத்தாபப் பட்டாள். பரிகாரம் தேடினாள். விலைஉயர்ந்த பரிமள தைலத்தை எடுத்துக் கொண்டு யேசுவைத் தேடிச் சென்றாள். அவர் பாதத்தில் விழுந்து மாலை மாலையாகக் கண்ணீர் வடித்து மன்னிப்பை வேண்டி நின்றாள். தன்கூந்தலால் ஆண்டவர் பாதத்தைத் துடைத்து, முத்தி செய்து, பரிமளதைலத்தையும் பூசிப் பாவ நிவாரணம் கோரினாள்.

அன்பு நிறைந்த யேசு "உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, சமாதானமாய்ப் போ" என்றார்.

பெரிய பாரம் நீங்கிற்று. அந்தகார இதயத்தில் ஆண்டவரின் இரக்கத்தால் அருட் பிரகாசம் உண்டாயிற்று.

ஐறின் மேர்சி
க. ம. த. பாடசாலை
கடற்கரைத்தெரு,
நீர்கொழும்பு.

## என்ன சொன்னது? கேளுங்கள்!

அன்று தேவமாதா மாசில்லாமல் உற்பவித்த திருநாளுக்கு முந்தின நாள். அதனால ஆசனக்கோவிலில் திரளான மக்கள் பாவ சங்கீர்த்தனம் செய்து கொண்டு இருந்தார்கள். அவர்களின் தொகைக்கு ஏற்கப் பலகுருமார் பாவ சங்கீர்த்தனம் கேட்டுக்கொண்டு இருந்தனர். கோவில் முழுவதும் அமைதியாய் இருந்தது. முறைமுறையாய் ஒவ்வொருவரும் வைத்தியனை நாடும் நோயாளி போலக் குருவானவரை அண்டிப் பாவ சங்கீர்த்தனம் செய்தனர். ஆனால், ஒருவர் மாத்திரம் ஆத்திரமும், அங்கலாய்ப்பும் காட்டி அங்கும் இங்குமாக ஓடியாடிக் கொண்டு நின்றார்.

என்ன அதிசயம்! அவரது ஆட்டமும், ஓட்டமும் எவர் கண்ணுக்கும் தெரியவில்லை. ஆனால், ஓர்குருவானவரின் பார்வையில் மட்டும் தென்பட்டார். உடனே சுவாமியார் அவரைத் தம்மண்டை அழைத்து "அங்கும், இங்கும் ஓடி ஓடி என்னசெய்கிறாய்?" என்றுகேட்டார். அதற்கு அந்த ஆசாமி உத்தாரமாக: "நான் களவு எடுத்தேன் சுவாமி; அதனை இப்போது உத்தரிக்கிறேன்" என்றார், அதைக் கேட்டசுவாமியார்: "என்னப்பா களவு எடுத்தாய்? என்ன மாதிரி உத்தரிக்கிறாய்"? என்று கேட்டார்.

"சுவாமி, ஆம், நான் களவு எடுத்தேன்; அதாவது பாவம் செய்யும் போது அவர்களின் வெட்கத்தைக் களவெடுத்தேன்; இப்போ பாவத்தைச் சொல்லும் போது களவெடுத்த அந்த வெட்கத்தைத் திரும்பக் கொடுத்து எனது உத்தரிப்புக்கடனைத் தீர்த்து அவர்கள் தங்கள் பாவங்களை ஒழிக்கச் செய்கிறேன்" என்றார். அன்பனே! பார்த்தாயா? பிசாசு, தனது கடமையில் எவ்வளவு ஊக்கமாய்இருக்கிறது! எப்படி விழிப்பாய் இருக்கிறது! அதனால் நீயும் விழிப்பாய் இரு. செபஞ் செய். பாவச் சோதனையை விலக்கு. பாவத்தில் விழுந்தால் பயப்படாதே. பாவத்தைச் சொலலவெட்கப்படாதே. ஆனால், பாவத்தைச் செய்ய வெட்கப்படு. பிசாசை மேற்கொள்வாய். ஜெயம் பெறுவாய்.

பாலர்பிரேசீடியம்,
அர்ச். அன். பாடசாலை,
மேட்டுத்தெரு, கொழும்பு.

## கண்டு பிடியுங்கள்.

ஆறு எழுத்துக்களால் ஆனது
1-ம் எழுத்து — யாகத்திலும உண்டு—தியாகத்திலும் உண்டு.
2-ம் எழுத்து — வாழ்விலும் உண்டு—தாழ்விலும் உண்டு.
3-ம் எழுத்து—உப்பிலும்உண்டு—வெப்பிலும் உண்டு.
4-ம் எழுத்து—பாவிலும் உண்டு—பாலிலும் உணடு.
5-ம் எழுத்து — மணத்திலும் உண்டு—குணத்திலும் உணடு.
6-ம் எழுத்து — கம்பத்திலும் உண்டு—தம்பத்திலும் உண்டு.

முதல் இரண்டு எழுத்துக்களையும் சேர்த்துப் படித்தால் ஓர்வீணையின் பெயரைக் குறிக்கும்.

விடை: யாழ்ப்பாணம்
—ஜே. ஜி. ஏ.

## பாலர்பக்கத் தொடர்ச்சி



### காலையில்...

1

காலையிற் சூரியன் வந்திடும்
காசினிக் கேஒளி தந்திடும்
நீலவிண் பொன்னிறஞ் சிந்திடும்
நீளிருள் சென்று மறைந்திடும்

2

ஆலயத் தின்மணி கேட்டிடும்
ஆனந்தப் புள்ளினம் பாடிடும்
தாலமுந் தன்விழி பூத்திடும்
தன்குரல் சேவலுஞ் சேர்த்திடும்

3

வாசனைப் பூக்கள் மலர்ந்திடும்
வண்டினங் கண்டு மகிழ்ந்திடும்
ஈசனைப் போற்றிப் புகழ்ந்திடும்
இன்னொலி எங்கும் நிறைந்திடும்

"போன்"

## நானும் உங்களைப்போல்...

மணி — தோத்திரம் சிஸ்றர்!

சிஸ்றர் — யாரது?

மணி — உங்கள் மணிதான் சிஸ்றர். வேறுயார்?

சிஸ். — நல்லது மணி, வந்து விட்டீரா?

மணி — ஆம், சிஸ்றர். இன்று உங்களுடன் ஓர் விசேஷ சங்கதி பேச என்று நேரத்தோடு வந்தேன்.

சிஸ். — என்ன சங்கதி பேசப் போகிறீர் மணி?

மணி — எனது அண்ணன் இராஜகுருமடத்துக்குப் போனரே; அதிலிருந்து எனக்கு என்னவோ கவலையெல்லாம் சிஸ்றர்.

சிஸ். — ஏன் மணி? அண்ணன் இல்லாது அவ்வளவு பெரிய கவலையா? அருமைத் தம்பி, தங்கைமார் இன்னும் நால்வர் இருக்கிறார்கள் அல்லவா? அவர்களால் உனதுமனம் திருப்தி அடையவில்லையா? அன்றியும் அண்ணன் எவ்வளவோ மேலான — தேவனுக்கு எவ்வளவோ உகப்பான உன்னதபதவியை நாடிச் சென்றிருக்கிறார். அதனால் அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லையே.

மணி — அப்படி அண்ணனைக் காணாத கவலைஅல்ல சிஸ்றர்; ஆனல், நானும்...

சிஸ். — என்னமணி, என்ன, நானும்; அதற்கு அப்பால் ஏன் மௌனம்? சங்கதியைச் சொல்.

மணி — சிஸ்றர்! நானும் உங்களைப் போல்...

சிஸ். — ஏன் மணி தயங்குகிறீர்? அதற்கு அப்பால் என்ன?

மணி — சும்மா இருங்க சிஸ்றர்; உங்களுக்கு என்ன விளங்கவில்லையா? என்னைப்போன்ற குறும்புத்தனமான — தன்னடக்கம்அற்ற பிள்ளைகளும் கன்னியாஸ்திரி ஆவதா என்றுதான் நினைக்கிறீர்கள் போல்.

சிஸ். — இல்லை, இல்லை, அப்படியல்ல. நீர் இன்னும் சிறுபிள்ளைதானே; இது வீண்யோசனை தானோ, அன்றேல் உண்மையானதுதானோ என்றுதான் எண்ணினேன்.

மணி — நான் என்ன குழந்தைப் பிள்ளை என்று நினைக்கின்றீர்கள் சிஸ்றர்? தேவதாயாரின் காட்சிபெற்ற ஜசிந்தாவை விட நான் சிறுமியா? அவ அர்ச்சியசிஷ்டவபதவி அருளப்படப்போவதை நான் அறியாமலா? கார்மேல் மடத்தைச்சேர்ந்தபோது சின்னத் தெரேசம்மாளின் வயது 15 மாத்திரம் என்பதும் நான் அறியாததா? அவ சீவித்தபடி சிறு ஒறுத்தல் முயற்சிகளோடு கூடிய சிறிய வழியை நானும் பின்பற்றலாமே. அப்படியானல் நான் ஓர் கன்னியாஸ்திரியாக என்ன தடை சிஸ்றர்?

சிஸ். — மணி! நீர் கெட்டிக்காரி. உமக்கு எல்லாம் தெரியும். நான் எண்ணியதைவிட எவ்வளவோ தூரம் போய்விட்டீர். கன்னியாஸ்திரியாக உமக்கு ஒரு தடையும் இல்லை. ஆனல், நீர் அறியவேண்டிய சில விஷயங்கள் இன்னும் உண்டு. அவற்றைப் பற்றிப் பின்னொரு முறை பேசுவோம்.

மணி — உபகாரம் சிஸ்றர். நான் போய் வருகிறேன். வணக்கம்!

சிஸ். — நல்லது மணி, போய்வாரும்.

அர்ச். அன்னம்மாள் பாடசாலை
மேட்டுத்தெரு, கொழும்பு.

விடை: (1) தும்பி. (2) 3 கதிரை. 4 மனிதர். (3) கண், ஒரு கைவிரல்கள், பல்லு, நாக்கு. (4) மயில்.

எஸ். தம்பிராசா,
கிறீஸ்துராசா பாடசாலை,
முருங்கன்.

## என்னை நேசிப்பாயா?

அருவியின் கரையிலிருந்து புறப்படுமுன் நாங்கள் எல்லோரும் ஒருசிறு கல்லைக்கொண்டு மலையிலே தட்டித் தட்டி எங்கள் பெயரைக் கொத்தினேம். இந்த நிலையில்லாத உலகில் பிற் சந்ததிகளுக்குச் செய்து விட்டுச் செல்லும் சிரஞ்சீவிக் காரியம் இது. நாங்கள் மட்டும் என்ன? நிலைத்து நிற்க வேண்டும் என்று விரும்பாதவர் யார்தான் உண்டு? அதோ மீசையும் தாடியும் வளர்ந்து, கூந்தல் சின்ன பின்னமாகப் பின்னிச் சுருண்டு கிடக்கின்ற அந்தக் கிழவரைப் பாருங்கள். அவரும் அந்த மலையில் ஏதோ பொறிக்கிறாரே.

நானும் எனது நண்பனும் அந்தக் கிழவரையே நெடுநேரம் பார்த்துக்கொண்டு நின்றுவிட்டு மெதுவாக அவர் அருகில் போனேம். என்ன அற்புதம்! அவர் "பாலயேசுவே" என்று அங்கு இருந்த மரங்களிலும், மலையிலும், புற்தரையிலும் கொட்டை எழுத்துகளில் எழுதினர். உடனே நான் எனது நண்பனைப் பார்த்து: "இவர் பெயர் பாலயேசுவா? ஆ, நமது யேசுநாதரா" என்று மெதுவாகக் கேட்டேன். அதற்கு நண்பன்: "பொறும்; நானே அவரிடம் கேட்கிறேன்" என்று கூறிவிட்டு, "அப்பா, தாங்கள் எதற்காக இப்படிப் பெயரை எழுதவேண்டும்" என்று கேட்டான்.

அதற்கு அவர் எங்களை அங்கு அமரச்செய்தார். சற்று வேளையால் கதை தொடங்கி விட்டது. அதாவது: "என் பெயர் யோசெவ் என்றுதான் யார் கேட்டாலும் சொல்வேன்; என் தாய் தந்தை எனது சிறு வயதிலே என்னை விட்டு மறுலோகம் சென்று விட்டனர்; நான் சிறுபிராயந் தொட்டுப் பிச்சை எடுத்து இன்னும் அவ்விதமே வாழ்ந்து வருகிறேன்; நான் சிறுவனய் இருக்கும் பொழுது தினமும் மாணவர்கள் விளையாடுவதைப் பார்க்கும் போது எனக்கும் விளையாட விருப்பம் உண்டாகும்; ஆனல், யாரும் என்னை விளையாட்டில் சேர்க்க மாட்டார்கள்; ஒரு நாள் என்னை அறியாமலே நான் அவர்களிடம் சென்று, என்னையும் விளையாட்டில் சேர்க்கும்படி கேட்டேன்; ஆனல், அவர்கள் என்னைப் பின்முன் பாராது விரட்டி அடித்து விட்டார்கள்; நான் பயந்து இந்தக் காட்டுப் பாதையால் ஓடும்பொழுது திடீரென ஓர் பன்னிரண்டுவயசுப் பாலியர் என்முன் வந்து: "நண்பா, நானும் உன்னுடன் ஓடிவரட்டுமா?" என்று கேட்டார்.

நான் அப்பாலியரைப் பார்த்ததும் நின்று விட்டேன்; சற்று வேளையால் அவர் என்னை அன்புடன் நோக்கி: "நண்பா, நீ என்னை நேசிப்பாயா?" என்று கேட்டார். அதற்கு நான் "ஆம், நேசிக்கிறேன்" என்றேன்; இதைக்கேட்டதும் அவர் சந்தோஷத்துடன்: "நான்யார் தெரியுமா? நான்தான் உனது நண்பன் பாலயேசு; உன்னைப் பிறர் புறக்கணித்தால், சரி, நான் உன்னை நேசிப்பேன்" என்று சொல்லி மறைந்து விட்டார்.

அன்று முதல் இன்று வரையும் நான் அவரை இக்காடெங்கும் தேடிப் பார்த்தேன்; இன்னும் தேடிப்பார்க்கிறேன்; காணவில்லை; ஆதலால்தான் நான் எனது நண்பரின் பெயரைக் கண்ட கண்ட இடமெல்லாம் வரைகிறேன்; என் நண்பர் இங்கு வந்தால் இந்த எழுத்துக்களையாவது கண்டு என்னை மீண்டும் தேடி வருவார் என்று சொல்லிக்கதையை முடித்தார்.

ஏ. எஸ். கோமஸ்,
அர்ச். மரியநாயகி கல்லூரி
மத்துகம.

## கணிதப்பூச்சி எழுதுகின்றார்

அருமையான பிள்ளைகளே!

வணக்கம். சென்றமுறை வெளிவந்த கணிதப்பூச்சியின் விடைகளை ஆராய்ந்தபோது, நான் உங்களைச் சில காரியங்கள் கேட்க வேண்டுமென ஆசித்தேன். கணிதப்பூச்சி இல. 3 கடுமையாகத்தான் காணப்பட்டதா? அன்றேல் அதனைப் பூர்த்தியாக்கும் நிபந்தனைகளை மறந்துதான் போனீர்களா? அதுவும் இல்லையானல் கொடுபட்ட நிபந்தனைகள் பிரமாணங்களுக்கு அப்பாற்பட்டனவென்று நினைத்தீர்களா? உங்களில் அநேகர் உண்மையானவிடைகளைக் காணமுடியாததற்குப் போதியகாரணங்கள் வேறுதான் உண்டா? சொல்லுங்கள், சற்றுமே பயம்வேண்டாம். ஏற்றமருந்து என்னிடம் இருக்கின்றது. அதனைப்பெற விரும்பினல் எதிர்ப்படும் வில்லங்கங்களை எனக்கு நேரகாலத்துடன் அறிவியுங்கள். குணமடைவீர்கள். நிச்சயம்.

மறுமுறை உங்களுக்குப் புதிய போட்டிஒன்றைத் தயாரித்திருக்கிறேன். அது என்னவாய் இருக்குமென்று அறியப் பலர் ஆசிக்கக்கூடும். இதோ, சொல்லிவிடுகிறேன். இப்போட்டிக்குப் பெயர் "நிறமூட்டும் போட்டி." காவலனிலே பாலர்பக்கத்தில் படங்கள் வெளியாவதை எதிர்பாருங்கள். அவைகள் அச்சில் வெறுங் கோடுகளாகவே கொடுக்கப்பட்டிருக்கக் காண்பீர்கள். நீங்கள் அவ்வெற்றுப்படங்களை அவதானித்து, வெறுமையான இடங்களுக்குப் பலவர்ணங்கள் பக்குவமாய்த் தீட்டிவிட வேண்டியதுதான். அதன்பின் அப்படத்தை வெட்டிப் பெயரும், விலாசமும்இட்டு அனுப்பிவைக்கவேண்டும். ஆனல், இதில் ஓர் உண்மை ஞாபகத்தில் இருக்கவேண்டும். மிகத்திறமாக நிறமூட்டிப் படம்அனுப்பியவரின் நாமமே பிரசுரிக்கப்படும். அவர்அனுப்பிய பரிசுபெற்றபடம் அச்சில்வெளிவராது.

நிற்க, கணிதப்பூச்சி இல. 3-இன் போட்டி முடிபு பின்வருமாறு:

1. வே. மரியதாஸ், உரும்பராய்.
2. ஏ. சேகு முகமது, முருங்கன்.
3. எஸ். உவில்லியம், இளவாலை.

ஈற்றில், நிறமூட்டும் போட்டியை எதிர்பாருங்கள்! சுபம்!

## மூளைக்கு வேலை

1. ஒரு பிராணியோ, அல்லது பறவையோ இறந்தாலும் அதன் செட்டை ஒடுங்காது. கண்ணும் மூடாது. அதுஎன்ன?
2. ஒரு தொகை மனிதர் ஒரு கலியாண வீட்டுக்குப் போனார்கள். அங்கே வீட்டுக்காரன் ஒரு தொகையான கதிரைகளை அவர்களுக்கு எடுத்துப் போட்டான். அவற்றிலே எல்லோரும் அமர்ந்தார்கள். அமர்ந்த மனிதர் எத்தனை பேரெனில்: இரண்டு இரண்டு பேராய் அமர்ந்தால் ஒரு கதிரை மிஞ்சும். ஒவ்வொரு ஒவ்வொரு ஆளாய் அமர்ந்தால் ஒரு ஆள் மிஞ்சும். கதிரைஎத்தனை? ஆள் எத்தனை?
3. காட்டுக்குள்ளே, கருஞ் சோலைக்குள்ளே, கனி விளாம்பழம் பொத்தென்று விழக் கண்டது 2 பேர். எடுத்தது 5 பேர். சாப்பிட்டது 32 பேர். ருசி பார்த்தது யார்? அது என்ன?
4. காட்டில் வசிக்கும் அழகசுந்தரன். கண்கள் ஆயிரம் இறகிலுள்ளவன். வேந்தன் முடி உச்சியில் உள்ளவன். மேகம் கறுக்கச் சோலையில் ஆடுபவன் யார்?

[1-ம் கலம் பார்க்கவும்]

## மலை அசைந்தது

இற்றைக்கு அநேக வருடங்களின் முன் அதிசயமான காரியங்களைச் செய்த ஓர் பெரிய அர்ச்சியசிஷ்டர் இருந்தார். அவரை அதிசயமனிதன் என்றே சகலரும் அழைத்து வந்தனர். ஒருமுறை ஓர் அஞ்ஞானக் குரு அவரைப் பார்க்க வேணடும்என்ற நோக்கம் கொண்டு வந்தபொழுது அவருடைய பிரசங்கம் ஒன்றைக் கேட்கச் சமயம் கிடைத்தது.

அவர் தேவனுடைய வல்லமையைப் பற்றியே பிரசங்கம் செய்துகொண்டிருந்தார். "தேவன் எல்லாம்செய்ய வல்லவராய் இருக்கிறார்; நாம் விசுவாசத்துடன் கேட்கும் யாவையும் அவர் தந்தருளுகிறார்" என்று தேவன்செய்த புதுமைகளை எடுத்துக் காட்டிக்கொண்டு இருந்தார். இதைக்கேட்ட அந்த அஞ்ஞானப் பூசாரி குலுங்கச் சிரித்தான். அவரைப் பார்த்து, ஒரு அதிசயத்தைச் செய்யும்படி நையாண்டியாகப் பின்வருமாறு குறித்துக் கேட்டான்.

"நீர் சொல்வது போல உங்கள் கடவுள் அவ்வளவு வல்லமையுடையவரானல் அந்தமலையை இடம்விட்டு அசையச் செய்யும் பார்ப்போம்" என்றான். உடனே அவரும் மலைக்குக் கட்டளை கொடுத்தார். மலையும் தாமதமின்றியே அசைந்து காட்டியது. தேவன் தமது வல்லமையைக் காட்டினர். இதைக் கண்டதும் அந்தப் பூசாரியின் மனம் மாறியது. இப்பெரிய அதிசயம் அவனைச் சும்மாவிடுமா? தனது பிழையை உணர்ந்தான். அவரிடம் மன்னிப்புக் கேட்டான். தனது அஞ்ஞான மதத்தை விட்டுச் சத்திய மறையைத் தழுவினன்.

இப்பெரிய அதிசய மனிதன் யார் தெரியுமா? இவர்தான் அர்ச். கிறகோரியார். கார்த்திகை மாதம் 17-ந் திகதி இவரது திருநாளைத் திருச்சபை கொண்டாடுகிறது.

— எம். ஜே. எம்.

— அமெரிக்க ஐக்கியதேச லொஸ் ஆஞ்சேல்ஸ் நகரிலே லெவ்ரினண்ட்-கர்ணல் எவ். கே. எவறெஸ்றஎன்றவிமானி "சூப்பர் சபேர்" என்ற வடஅமெரிக்கவிமானத்தைச் சென்றவியாழக் கிழமை சோல்றன் கடல்நீளம் மணித்தியாலம் 754·98 மைல்வீதம் செலுத்திச்சென்று உலகில் முதன்மை பெற்றிருக்கின்றார்.

## அந்தோனி அநாதையா ?

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனல், ஜெயநாதனிடமாக அங்கு ஓர்பெண்மணி காட்சியளித்து நின்ருள். அந்தோனிசுவாமியாரின் குருப்பட்டாபிஷேகதிருவைபவத்தின்போது ஆலயத்தில் சமுகமாயிருந்தாருள் அவளே முதலிடம் வகித்திருந்தாள். "அந்தோனிசுவாமி அநாதை என்ருர்களே ; அதுஎல்லாம் சும்மாவாம் ; அதோ நிற்கின்றஅம்மாள் அவருடைய அம்மாவாமே ; அதுவும் பெரியநிலைபரத்தில் உள்ளவளாமே ; அவர் குருமடத்தில்படிக்கும்போது இடையிடையேவந்து அவரைச் சந்தித்துப் பணங்கட்டிப்போனுளாமே" என்றெல்லாம் பலரும் அவ்வேளை பேசிக்கொண்டனர். அன்று அந்தோனிசுவாமியாரின் அபிஷேகிக்கப்பெற்ற திருக்கரங்களை ஆனந்தக்கண்ணீர்பெருக மூந்த அன்புடன் முத்தமிட்டு முதல்ஆசிபெற்றவளும், மறுநாள் அவரது முதற்பூசையில் அவர் திருக்கரத்தால் முதன்முதலாகத் திவ்வியநன்மைபெற்றுக்கொண்டவளும், பிந்த எத்தனையோவெகுமதிகளை அவருக்குத்தெட்சணையாக வைத்தவளும் அந்த அம்மாளே. ஆம், அன்று அவரை அடித்துத் துரத்திவிட்டுப் பின்னர் தனது பிழையை உணர்ந்து, பச்சாத்தாபப்பட்டு மன்னிப்பிரந்து திரும்பவும் அவரைத் தனதுபிள்ளையாக ஏற்றுக்கொண்ட அவரது சிற்றன்னையே அங்கு காட்சியளித்த அப்பெண்மணிஎன்க. சுபம்!

---

### புத்தக மதிப்புரை

**Modern School Geometry**
Part II.

## கேத்திரகணிதம்
### (இரண்டாம்பாகம்)

ஆசிரியர் : யோ. வே. குணரத்தினம், B. A. (எட்வேட் கணிதங்களின் ஆக்கியோன்.)

பிரசுரம் : அம்ரு அச்சகம் லிமிற்றெட், சென்னை 6.

விலை : ரூபா 2-75

கிடைக்குமிடம் : அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம், யாழ்ப்பாணம்.

சிரேஷ்டபாடசாலைகளிலே கீழ்வகுப்புகளுக்கான வரிசையிலுள்ள மூன்று கேத்திரகணித நூல்களிலும் இரண்டாவதுநூலாக இந்த இரண்டாம்பாகம் வெளிவந்திருக்கின்றது. மாணவரைக் கேத்திரகணிதத்துக்கு அறிமுகப்படுத்தவே—அதாவது மாணவர்கள் அடிமட்டம், மூலைமட்டம், வட்டாரி, பாகைமானி முதலியகருவிகளை உபயோகித்து வடிவங்களை நுட்பமாகவும், அழகாகவும் வரைந்து அப்பியசிக்கவும, பிரமாணத்துக்கு வரைதலில் தேர்ச்சியடையச் செய்யவுமே முதல் நூல் இயற்றப்பட்டது. இந்த இரண்டாம் நூல் நிரூபித்துக் காட்டுதலின் வழிவகைகளை மாணவர்கள் அறியச் செய்தலையே நோக்கமாகக்கொண்டுள்ளது. இது மூன்றுபிரிவுகளாக வகுக்கப்பெற்று, முதலாம்பிரிவில் கேத்திரகணித பாடத்தை முதன்முறையாகக் தொடங்குவதற்கு உதவியாக முதற்பாகத்தின் அடக்கம் மிகச்சுருக்கமாகத் தரப்பட்டிருக்கிறது. இந்தஇரண்டாம் பிரிவில், சிலதாட்டாந்தங்களை ஆராய்ச்சிமுறையாகச் செய்து அவற்றின்பேறுகளைக் கண்டபின் அவற்றை உபயோகிப்பதற்கான அப்பியாசங்கள் தரப்பட்டிருக்கின்றன. அடிப்படையான உண்மைகளையும், அவற்றின் உபயோகங்களையும் மாணவர்கள்நன்கு அறிந்துகொண்டனரா என்பதைப் பரிசோதிக்கும்பொருட்டு இந்நூலின் கடைசிப்பகுதியில் தரப்பட்டிருக்கும் பரீட்சைவினுக்கள் அவர்களுக்கு மிகுந்தபயன் அளிப்பனவாகும். கேத்திரகணிதம் கற்பிக்கும் முறையைப் பற்றிக் கணிதசங்கத்தார் வெளியிட்ட இரண்டாம் அறிக்கையை மேற்கொண்டே இந்நூலின் விஷயங்களும், முறைகளும் தொகுக்கப்பட்டிருக்கின்றன. அரசினரின் புதிய பாடத்திட்டத்துக்கும், பொழிப்புக்கும்ஏற்பப் பிரஸ்தாபம்பெற்ற எட்வேட் கணிதங்களின் ஆக்கியோனை ஆசிரியர் தமக்குள்ள சிறந்தஅனுபவத்தைக் கொண்டும், தகுந்தஆராய்ச்சியுடனும் இயற்றித்தந்திருக்கும் இந்தநூலையும் தமிழாசிரியஉலகம் நல்வரவேற்று நன்மையடைய வேண்டுமென ஆசிக்கின்ரும். நமக்கு உதவப்பெற்ற பிரதிக்காக நன்றிகூறுகின்றேம்.


---

## கிறீஸ்து இராசா திருநாள்
### முல்லைத்தீவு

இத்திருநாள் வழமைப்பிரகாரம் முல்லைத்தீவுப் பட்டின கத்தோலிக்க வாலிபர்களால் சென்ற 24-10-53மாலை தொடக்கி மறுநாள் மாலைவரை மிகச் சிறப்பாய்க் கொண்டாடப்பட்டது. அன்று சம்பேதுருவானவர் ஆலயம் புதுஎழிலுடன் விளங்கிப் புதுப்பொலிவுடன் காட்சியளித்தது. மாலை 6மணியளவில் செபமாலை சொல்லப்பெற்று மாலைஆராதனைபாடிச் சற்பிரசாத ஆசீர்வாதம் அருளப்பட்டது. மறுநாட்காலை வாலிபகுழாத்தின் ஆவலைப் பூர்த்திசெய்யப்போலும் ஆதவன்உதித்தான். அன்று ஞாயிறுவாரமாதலால் திவ்வியபூசை காணவும், கிறீஸ்துஇராசாவின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுமாறும் பெருஞ்சனத்திரள் ஆலயத்தில் தேங்கியிருந்தது. வாலிப உள்ளங்கள் தங்களைத் தேவஇராசாவுக்கு ஒப்புக்கொடுக்குமாறு பேருவகையுடன் எழுந்துநிற்க, பத்திக்கிருத்தியங்கள் ஆரம்பமாயின. செபமாலையின்பின் கூட்டக்காரியதரிசியால் நல்வாசினை வாசிக்கப்பெற்று எல்லோருள்ளங்களும் ஒருமுகப்பட்டு யேசுஇராசாவை நாடிநிற்க, வண. கட்டளைச் சுவாமி அவர்களால் பாடற்பூசை நிறைவேறியது. வாலிபரும், மற்றுந்திரளானமக்களும் தேவநற்கருணை பெற்றுத் திருநாளைப் புனிதமுறச்செய்தனர். மாலை 4-30 மணியளவில் செபமாலை, திருமணித்தியாலம், சற்பிரசாதஆசீர்வாதம் முதலியவற்றின்பின் கிறீஸ்துஇராசா கூட்டத்தைச்சேர்ந்த வாலிபர்கள் தங்கள் வருடாந்தபொதுக் கூட்டத்தைக் குருமனையில் நடாத்தினர். அத்தருணம் சங்கீதம், களியாட்டுமுதலியவற்றுடன் தேவஇராசாவுக்கு ஸ்துதிகூறிநிற்க, கட்டளைக்குருவரது ஆசியுடன் விழா இனிதே முடிவெய்தியது. வாலிபரின் ஒத்துழைப்புப் பாராட்டத்தக்கது.

— நிருபர்.

---




## நன்றியறிந்த ஸ்தோத்திரங்கள்

சதாசகாயமாதா, கோடியற்புதரான அர்ச் அந்தோனியார், பாலகயேசுவின் சின்னத்தெரேசம்மாள் முதலியோரின் வேண்டுதலால் நான் பரீட்சையில் சித்தியெய்தும்படியாகச் சேட்டவரம் பெற்றுக் கொண்டேன். நான்பெற்ற சகலநன்மைகட்கும் நன்றிகூறுவதுடன் நேர்த்தியின்படி இதைப்பிரசுரிக்கிறேன்.

முதலைகுத்தி **P. S. M.**

நான் ஒருமாதமாக வேலைஇல்லாதிருந்து அர்ச். அந்தோனியாருடைய வேண்டுதலால் ஒருவேலையில் அமர்ந்து வேலைசெய்துவருகிறேன். அர்ச். அந்தோனியாருடைய நாமம் எப்பொழுதும் புகழப்படக்கடவது. நேர்த்தியின்படி இதைப்பிரசுரிக்கிறேன்.

மாத்தளை **J. A.** தோமாஸ்

# இன்ஷூரன்ஸ் ஆசாமிகள் இல்லாது போயிருந்தால்

வெகு சொற்பமானவர்களே ஆயுள் அஷ்யூரன்ஸ் பொலிஸிதாரராக இருக்கக்கூடும். ஆயிரக்கணக்கான விதவைகளும், அநாதைக் குழந்தைகளும் நிர்க்கதியாகப் பரிதவிக்கக்கூடிய நிலைமையிலிருப்பர். உங்கள் குடும்பத்திற்கு உடனடியாகப் பாதுகாப்புத் தேடிக் கொள்வதற்கு ஆயுள் அஷ்யூரன்ஸே நிச்சயமான வழியாகவிருப்பினும், ஆயுள் பொலிஸிகளைப் பெற்றுக்கொள்வதற்கு இன்ஸ்யூரன்ஸ் கந்தோர்கள் முன்புக்கு நீண்ட வரிசைகளில் ஜனங்கள் நின்றுகொண்டிருக்கவில்லை. காரணம் ஆயுள் அஷ்யூரன்ஸ் வாங்கப்படுவதல்ல, ஆனல் விற்கப்படுவதே.

இது எளிதில் ஊகிக்கக்கூடியது. ஏனெனில், ஒவ்வொரு மனிதனும் பூரண ஆயுள் காலம் ஜீவிக்க முடியுமென்றே எதிர்பார்க்கிருன். எதிர்காலத்தில் அளவில்லாத நம்பிக்கையுள்ளவனுகப் பிற்காலத்திற்கெனப் பாதுகாப்புத் தேடுவதை ஒத்தி போடுகிருன். ஏதாவது அபாயம் நேருவதானல், தனக்கல்ல, அயலான் ஒருவனுக்கே அவ்வாறு நேருமென நினைக்கிருன். எனினும், நாம் நினைப்பதுபோல் நன்மையே எப்பொழுதும் நேருவதில்லை. எனவே ஒரு மனிதன், மனைவி, குழந்தைகளின் நலனைப் பொறுத்த மட்டில் இன்ஸ்யூரன்ஸ் ஏஜெண்டுகள் இருப்பது பெரிய அதிர்ஷ்டம். இந்த ஏஜெண்டுகள் ஒருவனின் விருப்பையோ, வெறுப்பையோ பொருட்படுத்தாது உதவி புரியும் உண்மைநண்பர்களாக விளங்குகின்றனர்.

## சிலோன் இன்ஷூரன்ஸ்
**கம்பெனி லிமிட்டெட்,**

தலைமை ஆபீஸ் :

**69, இராணி வீதி — கொழும்பு.**

**Ceylon Iusurance Co. Ltd., 69, Queen St., Colombo**


---

### ஐரோப்பிய சுற்றுப்பிரயாணம்

இளவாலை சென் ஜேம்ஸ் ஆலயத்தைச்சேர்ந்த தியோகு அந்தோனி என்பவர் 30 வருடகாலம் மதுபரிபாலன சேவையில் ஈடுபட்டிருந்து இப்பொழுது தமது சேவையை நிறுத்திக் கொண்டு ஐரோப்பிய சுற்றுப்பிரயாணஞ்செய்ய ஆயத்தப்படுகிருர். இவர் வருகிற மார்கழிமாதத்துள் ஐரோப்பா செல்லுவார்.

---

### பிரியாவிடைஉபசாரம்

திரிகோணமலை, சின்னக்கடை பரிசுத்த வியாகுலமாதா கோவில் கட்டளைக்குருவரும, பாலையூற்றுத் திருப்பதிப் பரிபாலனருமாக ஏறக்குறையக் கடந்த பத்துவருடங்களாகத் திருத்தொண்டாற்றிய வண ரி. ஆறன்ஸ் சுவாமி அவர்களுக்கு முன்சொன்ன பங்குக் கிறீஸ்தவர்களால் ஓர் பிரியாவிடைஉபசாரம் 25-10-53-இல் நடந்தேறியது. வழக்கறிஞர் திரு. துரைநாயகம் அவர்களும், மற்றும் சின்னஞ்சிறுமிகளும் மலர்மாலை சூட்டித் தந்தையின் போன்பைக் காட்டினர். திரு. ஈ எஸ். சைமன்அவர்கள் தந்தையின் குணுதிசயங்களையும், அவர்ஆற்றிவந்த தேவதொண்டின் மகத்துவத்தையும் பற்றிச் சொன்மாரி பொழிந்தார். புகைப்படம் பிடிக்கப்பட்டும், தேநீர்விருந்துடனும், தந்தையின் நன்றிஉரையோடும் பிரியாவிடை உபசாரம இனிதே முடிவெய்தியது. கிறீஸ்துஇராசா வாழ்க ! அவரது ஞானஊழியன் பல்லாண்டு பணிபுரிக !!

—எஸ். எஸ். யோசேவ்

---


### 1954-ம் ஆண்டுக்கான இலங்கைச் சத்தியவேத பஞ்சாங்கம்

இப்போது தயாராயிருக்கிறது. ஓடோ (Ordo) வைச் சரிவரப் பின்பற்றுகிறது. தங்களுக்கு எவ்வளவு தேவை என்பதைத் தெரிவிக்குமாறு வண. குருப்பிரசாதிகள் கேட்டுக்கொள்ளப்படுகின்ருர்கள்.

**Manager,**
St. Joseph's Catholic Press,
JAFFNA.


---

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, November 5-1953